
www.tamilarangam.net

# அ ஆ இ

a aa ie



11

AYA
7 RUE DE COLOMBES
2600 ASNIERES SUR - SEINE ; FRANCE

DECEMBER 1992

## ழவியல் சிறப்பிதழ்

Tijdschrift voor Tamils in Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஆஇ

A AA IE

காலாண்டு இதழ்

சுவடு 11


டிசம்பர் 1992

வெளியீடு
இலங்கைக் கலாச்சாரக் குழு
நெதர்லாந்து

முகவரி:
A AA IE
Post bus 85326
3508 A H Utrecht
Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காற்றைக்கூட உன்னுடைய உடமையாக்கலாமா ?



வானத்தையும் பூமியின் கதகதப்பையும் எப்படி உங்களால் வாங்கவோ விற்கவோ முடியும்? இந்த எண்ணமே எங்களுக்கு விநோதமாக இருக்கிறது.

காற்றின் புத்துணர்வும் நீரின் மினுமினுப்பும் நமக்குச் சொந்தமல்லாதபோது அவற்றை நீங்கள் எப்படி வாங்க முடியும்?

இந்தப் பூமியின் ஒவ்வொரு அம்சமும் என்மக்களுக்குப் புனிதமானது. ஒளிரும் ஒவ்வொரு ஊசியிலையும், மணல் பரந்த ஒவ்வொரு கரையும், இருண்டகாடுகளில்

www.tamilarangam.net

கவியும் பனிமூட்டமும், காட்டுக்குள் இருக்கும் ஒவ்வொரு வெட்டவெளியும், ரீங்காரமிடும் ஒவ்வொரு வண்டும் என்மக்களின் நினைவிலும் அனுவத்திலும் புனிதமானவை. மரங்களுக்குள்ளே ஓடும் ஜீவரசம், சிவப்பிந்தியனின் நினைவுகளைச் சுமந்து செல்கிறது.

இறந்துபோன வெள்ளையர்களின் ஆவிகள் விண் மீன்களிடையே உலவும்போது தாம் பிறந்த மண்ணை மறந்துவிடுகின்றன. இறந்துபோன எங்களவர்களின் ஆவிகளோ இந்த அழகான பூமியை ஒருபோதும் மறப்பதில்லை: ஏனெனில் இந்தப்பூமி செவ்விந்தியனின் தாய். நாங்கள் இந்தப்பூமியின் ஒரு அங்கம்;அது எங்களில் ஒரு அங்கம். வாசம்மிக்க மலர்கள் எங்கள் சகோதரிகள். மானும் குதிரையும் பெருங்கழுகும் எங்கள் சகோதரர்கள். பாறை மலைமுகடுகள், புல்வெளிகளில் படிந்திருக்கும் பனித்துளிகள், குதிரைக்குட்டியின் உடல்வெப்பம், மனிதன்-எல்லாமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை.

ஆகவே எங்கள் நிலத்தை வாங்க விரும்புவதாக வாஷிங்டனிலிருக்கும் பெருந்தலைவர் சொல்லியனுப்பும்போது எங்களிடம் மிக அதிகம் எதிர்பார்கிறார். நாங்கள் சௌகரியமாக வாழ்வதற்கென்று எங்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்கித்தருவதாகப் பெரும் தலைவர் சொல்லியனுப்புகிறார்: அவர் எங்கள் தந்தையாகவும் நாங்கள் அவருடைய குழந்தைகளாகவும் இருப்போமாம்: ஆகையால் எங்கள் நிலத்தை வாங்குவதென்ற உங்கள் யோசனையை நாங்கள் பரிசீலிக்க வேண்டுமாம். ஆனால் அது ஒன்றும் எளிதானதல்ல. ஏனென்றால் இந்த நிலம் எங்களுக்குப் புனிதமானது.

ஓடைகளிலும் ஆறுகளிலும் பளபளத்து ஓடும் நீர் வெறும் நீரல்ல; அது எங்கள் மூதாதையரின் ரத்தம். நாங்கள் உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்பதானால், அது புனிதமானது என்பதை நீங்கள் நினைவிலிருத்த வேண்டும். அது புனிதமானதென்பதையும், ஏரிகளின் தெளிந்த நீரில் விழும் ஒவ்வொரு நிழலும் எங்கள் மக்களின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளையும் நினைவுகளையும் சொல்கிறது என்பதையும் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் சொல்லித்தர வேண்டும். நீரின் முணுமுணுப்பு என் தந்தையின் தந்தையுடைய குரலாகும்.

ஆறுகள் எங்கள் சகோதரர்கள்; அவை எங்கள் தாகத்தைத் தணிக்கின்றன. ஆறுகள் எங்கள் தோணிகளைச் சுமந்துசெல்கின்றன; எங்கள் குழந்தைகளைப் போஷிக்கின்றன. நாங்கள் எங்கள் நிலத்தை உங்களுக்கு விற்பதானால், ஆறுகள் எங்களுக்கும் உங்களுக்கும் சகோதரர்கள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். ஒரு சகோதரனிடம் நீங்கள் காட்டும் பாசத்தை இப்போதிருந்து நீங்கள் ஆறுகளிடமும் காட்டவேண்டும் என உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக்

www.tamilarangam.net

கொடுக்கவேண்டும்.

வெள்ளையனுக்கு எங்கள் வாழ்க்கை முறைகள் புரிவதில்லை என்பதை நாங்கள் அறிவோம். அவனுக்கு எல்லா நிலமும் ஒன்று. ஏனென்றால் இரவில் வந்து தனக்கு வேண்டியவற்றை நிலத்திலிருந்து சுருட்டி எடுத்துக்கொண்டு போகும் அந்நியன் அவன். இந்தப்பூமி அவனுக்குச் சகோதரன் அல்ல. பகைவன். அவன் அதில் ஒரு பகுதியைக் கைப்பற்றிய பிறகு ஓய்வதில்லை; அடுத்த நிலம் தேடிச்செல்கிறான். அவன் தன்னுடைய தந்தையின் கல்லறையை விட்டுச் செல்கிறான். அதைப்பற்றி அவனுக்கு அக்கறையில்லை. அவன் தன் குழந்தைகளிடமிருந்து நிலத்தை அபகரிக்கிறான். அதைப்பற்றியும் அவனுக்கு அக்கறையில்லை. தந்தையின் கல்லறையும், குழந்தையின் பிறப்புரிமையும் மறக்கப்பட்டுவிட்டன. தனது தாயான பூமியையும் சகோதரனான வானத்தையும், ஆடுகளைப்போலவோ பிரகாசமான பாசிமணிகளைப்போலவோ விலைக்கு வாங்கப்படுவதற்கும், கொள்ளையடிக்கப்படுவதற்கும், விற்கப்படுவதற்குமான பொருளாகவே அவன் கருதுகிறான். அவனுடைய பசி இந்த நிலத்தின் வளத்தை விழுங்கி பாலைவனத்தையே விட்டுவைக்கும்.

எனக்குத் தெரியவில்லை; எங்கள் வாழ்க்கை முறைகள் உங்களுடைய வாழ்க்கைமுறைகளிலிருந்து மாறுபட்டவை. உங்கள் நகரங்கள் செவ்விந்தியனின் கண்களைக் குத்துகின்றன. ஒருவேளை செவ்விந்தியன் காட்டுமனிதன், அவனுக்கு இதெல்லாம் புரிவதில்லை என்பதால் இப்படி இருக்கலாம்.

வெள்ளையனின் நகரங்களில் அமைதியான இடமேதும் இல்லை; வசந்த காலத்தில் இலைகள் துளிர்ப்பதையோ ஒரு வண்டின் சிறகு சரசரப்பதையோ கேட்கக்கூடிய இடமேதும் இல்லை. ஒருவேளை இதுவும் நான் காட்டுமனிதன், எனக்கு இதெல்லாம் புரிவதில்லை என்பதாலோ என்னவோ. நகரங்களில் இரைச்சல் செவிகளையே அவமானப்படுத்துவதாக இருக்கிறது. ராக்குருவியின் ஏகாந்தக் குரலையோ இரவில் குளத்தைச் சுற்றி தவளைகள் நடத்தும் வாக்குவாதங்களையோ கேட்கமுடியாத மனிதனின் வாழ்வென்ன வாழ்வு? நான் ஒரு செவ்விந்தியன், இதெல்லாம் எனக்குப் புரிவதில்லை. குளத்து நீரைத் தொட்டபடி விரையும் காற்றின் மென்மையான ஒலியும் நண்பகல் மழையினால் கழுவப்பட்ட அல்லது பைன் மரத்தினால் மணமுட்டப்பட்ட காற்றின் சுகந்தமும் செவ்விந்தியனுக்கு விருப்பமானவை.

காற்று, செவ்விந்தியனுக்கு அருமையானது. ஏனெனில் விலங்கு, மரம், மனிதன் - எல்லாமும் பகிர்ந்துகொள்வது ஒரே காற்றைத்தான். வெள்ளையனோ தான் சுவாசிக்கும் காற்றைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. சிறிதுசிறிதாகச் செத்துக்கொண்டிருக்கும் மனிதனைப்போல, நாற்றத்தை உணரும் சக்தியற்றவனாக அவன் இருக்கிறான். ஆனால் நாங்கள் எங்கள் நிலத்தை உங்களுக்கு விற்பதானால், இந்தக்காற்று எங்களுக்கு அருமையானது என்பதையும், அது, தான் வாழவைக்கும்

www.tamilarangam.net

எல்லா ஜீவராசிகளுடனும் தன் ஆன்மாவைப் பகிர்ந்து கொள்கிறது என்பதையும் நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். எங்கள் பாட்டனாருக்கு அவருடைய முதல்மூச்சைத் தந்த காற்று, அவருடைய இறுதிமூச்சை வாங்கிக் கொள்ளவும் செய்கிறது. நாங்கள் உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்பதானால், புல்வெளிகளின் மலர்களால் இனிமையாக்கப்பட்ட காற்றை அனுபவிப்பதற்கு வெள்ளைக்காரனும் போகக்கூடிய ஒரு தனியான, புனிதமான இடமாக நீங்கள் அதனை வைத்துக்கொள்ளவேண்டும்.

ஆக, எங்கள் நிலத்தை வாங்கும் உங்கள் யோசனையை நாங்கள் பரிசீலிப்போம். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடிவு செய்தால், நான் ஒரு நிபந்தனை விதிப்பேன்: வெள்ளையன் இந்த மண்ணிலுள்ள விலங்குகளைத் தனது சகோதரர்களாக நடத்த வேண்டும்.

நான் ஒரு காட்டுமனிதன்; வேறு எந்த வழியும் எனக்குப் புரிவதில்லை. ஓடும் ரயிலில் இருந்து வெள்ளைக்காரன் சுட்டுக்கொன்ற ஓராயிரம் எருமைகள் புல்வெளியில் கிடந்து அழுகுவதை நான் பார்த்திருக்கிறேன். நான் ஒரு காட்டுமனிதன்; உயிர்வாழ்வதற்காக மட்டுமே நாங்கள் கொல்லும் எருமையைவிட புகை கக்கும் இரும்புக்குதிரை எப்படி அதிக முக்கித்துவம் பெற்றிருக்கும் என்பது எனக்குப் புரியவில்லை.

விலங்குகள் இல்லையேல் மனிதன் எங்கே? விலங்குகள் எல்லாம் மறைந்துவிட்டால், மனிதன் மிகுந்த தனிமைக்குள்ளாகி மடிந்துவிடுவான். ஏனென்றால், விலங்குகளுக்கு என்ன நேர்கிறதோ அது விரைவில் மனிதனுக்கு நேரும். எல்லாமே ஒன்றோடு ஒன்று இணைந்தவை.

உங்கள் குழந்தைகளின் பாதங்களின்கீழ் உள்ள நிலம் எங்கள் பாட்டனாரின் சாம்பல் என்பதை அவர்களுக்கு நீங்கள் சொல்லிக் கொடுக்கவேண்டும். எங்கள் இனத்தவரின் ரத்தத்தாலும் சதையாலும் செழுமைபெற்றது இம்மண் என்பதை உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். அப்போது அவர்கள் இம்மண்ணை மதித்து நடப்பார்கள். இப்பூமியே நம்தாய் என்பதையே நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம், அது போல நீங்களும் உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள். பூமிக்கு என்ன நேர்கிறதோ அது பூமியின் மைந்தர்களுக்கும் நேரும். பூமியின்மீது மனிதர்கள் காறி உமிழ்வது தங்கள் மீதே காறி உமிழ்ந்து கொள்வதாகும்.

நாங்கள் இதனை அறிவோம்: பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல, மனிதன்தான் பூமிக்குச் சொந்தம். நாங்கள் இதனை அறிவோம். ஒரு குடும்பத்தை ஒன்றிணைக்கும் ரத்தத்தைப்போல் எல்லாப் பொருட்களும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. பூமிக்கு நேர்வதெல்லாம் பூமியின் மைந்தர்களுக்கும் நேரும். உயிர்களாகிய வலையை மனிதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செவ்விந்திய இனத் தலைவராக இருந்த சீயால்த் என்பவர், 1854ல் பெரியதொரு செவ்விந்திய நிலப்பகுதியை வாங்க விரும்பிய அமெரிக்க குடியரசுத் தலைவரான பிராங்லின் பியேர்ஸ் என்பவருக்கு எழுதுவதற்காக கூறிய கருத்துக்கள் இவை.**

**இயற்கையை நேசிக்கும் ஒரு மனிதனின் இதைய வெளிப்பாடு இது.**

பின்னவில்லை. அவன் அதில் ஓர் இழையே. வலைக்கு என்ன செய்கிறானோ அதைத் தனக்கும் செய்து கொள்கிறான்.

எந்த வெள்ளையனுடன் கடவுள் கூடவே நடந்து வந்து, ஒரு நண்பனோடு நண்பன் பேசுவதுபோலப் பேசவும் செய்கிறாரோ அந்த வெள்ளையனும் கூட பொதுவான ஊழினின்று தப்பமுடியாது..... எப்படியிருந்தாலும் நாம் சகோதரர்களாக இருக்கலாம். பார்ப்போம். ஒன்றுமட்டும் நாங்கள் அறிவோம்; இருவர் கடவுளும் ஒன்றே. இதை வெள்ளையன் ஒரு நாள் தெரிந்து கொள்வான். எங்கள் நிலத்தை உங்கள் உடைமையாக்கிக்கொள்ள விரும்புவதுபோல் அவரையும் உங்களது உடைமையாக்கிக்கொள்ள இப்போது நீங்கள் நினைக்கலாம். ஆனால் உங்களால் முடியாது. அவர் மனிதனின் கடவுள். சிவப்பன்மீதும் வெள்ளையன்மீதும் அவர் ஒரே மாதிரிக் கருணைபொழிகிறார். இப்பூமி அவருக்குப் பிரியமானது. பூமிக்கு இழைக்கப்படும் கேடு அதைப் படைத்தவருக்கு இழைக்கப்படும் அவமதிப்பாகும். வெள்ளையர்களும் ஒரு நாள் மறைந்தாக வேண்டும்; ஒரு வேளை மற்ற இனத்தவரை விட முன்னதாக. உன் படுக்கையை நீ அசுத்தப்படுத்தினால், ஓரிரவு உன் கழிவிலேயே மூச்சுத்திணறிச் சாவாய்.

ஆனால் நீங்கள் அழியும்பொழுது, இந்நிலத்திற்கு உங்களை அழைத்து வந்து , ஏதோ ஒரு சிறப்பு நோக்கத்தில் இந்நிலத்தின் மீதும் செவ்விந்தியன் மீதும் உங்களுக்கு ஆதிக்கத்தைத் தந்த கடவுளின் வல்லமையால் எரிக்கப்பட்டு பிரகாசமாய் ஒளிர்வீர்கள். அந்த ஊழ்வினை எங்களுக்குப் புதிராக இருக்கிறது. ஏனெனில் எங்கள் எருமைகளெல்லாம் கொல்லப்படும் போதும், காட்டுக்குதிரைகள் அடக்கப்படும்போதும், காட்டின் அந்தரங்கப் பகுதிகள் ஏராளமான மனிதர்களின் வாடையால் நிரப்பப்படும்போதும், செழிப்பான மலைகளின் காட்சி,பேசும் கம்பிகளினால் மறைத்துக் கெடுக்கப்படும்போதும் எங்களுக்குப் புரிவதில்லை. புதர்க்காடு எங்கே? மறைந்துவிட்டது. கழுகு எங்கே? மறைந்துவிட்டது. வாழ்வின் முடிவு; உயிர் பிழைப்பின் தொடக்கம்.

www.tamilarangam.net

# உயிரியல் நுண்முறையும் புதியஉலக ஒழுங்கும்


பத்மமனோகரன்

இருபது ஆண்டுகளுக்கு முன் நுண் இலத்திரனியல் நவீன வாழ்வியலில் எவ்வளவு பாரதூரமான மாற்றங்களை கொண்டு வந்ததோ அதே போல் 90களிலிருந்து உயிரியல் நுண்முறைகளில் (bio technology) ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியானது இன்று உலகின் பல்வேறு துறைகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த நவீன மாற்றங்கள் விவசாயத்துறையிலும், விவசாய தொழில் நுட்பங்களிலும் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புக்கள் குறித்து இன்று சமூக விஞ்ஞானிகள் நுணுக்கமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

உயிரியல் நுண்முறை என்றால் என்ன?

உயிரினங்களின் (living matters) அடிப்படை ஆக்கக் கூறுகளான நிறமூர்த்தங்கள் (genes), நொதியங்கள் (enzymes), நுண்ணங்கிகள்(micro organisms) போன்றவற்றை எந்த விதத்தில், தங்களுக்குத் தேவையான வடிவத்தில் மாற்றியமைத்துக் கொள்வது என்பதைப் பற்றியது தான் உயிரியல் நுண்முறையாகும்.

இவ்வாறு உயிர்க் கூறுகளை மாற்றியமைக்கும் பரீட்சார்த்த ஆராய்ச்சிகளில் ஆதிக்கம் செலுத்துபவை பல்தேசிய கம்பனிகளான UNILEVERS, SHELL போன்ற கம்பனிகளாகும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களின் அக்கறை உணவின் அடிப்படைக் கூறுகளைக் கண்டுபிடித்து, அவற்றை மாற்றியமைத்து, அதனால் விளையும் பொருட்களை விநியோகத்திற்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

உயிரியல் நுண்முறையை விவசாயத்திற்கு பிரயோகிப்பதன் மூலம் இதுகாலவரை விவசாயத்திற்கும் தொழிற்சாலைக்கும் இடையில் நிலவி வந்த தொடர்பு தலைகீழாக மாற்றப்பட்டுவிட்டது. முன்பு தோட்டத்தில் விளையும் உணவுப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்கள் என்பனவற்றையே தொழிற்சாலைகள் பாவித்து அந்த மூலப்பொருட்களை சுத்திகரித்து அல்லது மற்றும் செய்முறைகளுக்கூடாக பல பொருட்களைத் தயாரித்தனர். இன்று நிலமை அப்படியில்லை. தற்போதைய நடைமுறை இயற்கையில் வளர்பவற்றை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்வதாகும். எத்தகைய பயிர்களை விவசாயிகள் பயிர் செய்ய வேண்டும் என்பதை தொழிற்சாலைகள் தான் நிர்ணயிக்கும் நிலை வந்திருக்கிறது. இதற்குக் காரணம் ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்றைப் பாவித்துக் கொள்ளக்கூடிய பரீட்சார்த்த முறைகளில் ஏற்பட்டுள்ள பாரதூரமான உயிரியல் நுண்முறை வளர்ச்சியாகும்.

இன்று விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை உயிரியல் நுண்முறை மூலம் தொழிற்சாலைகளில் மிகவும் நுட்பமாக காபோஹைதரேட், புரோட்டின், கொழுப்பு போன்ற மூலாதாரப் பொருட்களாகப் பிரித்து எடுத்து விடுகிறார்கள். இந்த உணவின் அடிப்படை மூலாதாரக் கூறுகளை வைத்துக் கொண்டு தொழிற்சாலைகளில் புதிய உணவுப் பொருட்களை தயாரிக்கிறார்கள். மிருகங்களுக்கு கலப்பு உணவு தயாரித்து வழங்குவது போல இந்த உணவு உற்பத்திச் தொழிற்சாலைகள் மக்களுக்கு உணவு தயாரிக்க ஆரம்பித்து விட்டன. உலக உணவு உற்பத்தியின் அமைப்பையே இன்று ராட்சூச பல்தேசியக் கம்பனிகள் மாற்றியமைத்து வருகின்றன. இதனால் உணவு வளங்களுக்கும் உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கும் ஏற்படும் பாதிப்பு மோசமானதாகும்.

சாதாரணமாக, coco-cola கம்பனியானது தங்களது குளிர் பானங்களுக்கு சீனியைப் பாவித்தே இனிப்பூட்டி வந்தது. ஆனால் 1980ம் ஆண்டிலிருந்து இந்தக் கம்பனி தங்களின் தொழிற்சாலையிலேயே தயாரிக்கப்பட்ட இனிப்புப் பொருட்களைப் பாவிக்கத் தொடங்கிவிட்டது. இதனால் பிலிப்பைன்ஸில் உள்ள "நிகுரோஸ்" என்ற தீவில் உள்ள ஆயிரக் கணக்கான சீனி உற்பத்தியாளர்களும் அவர்களது குடும்பங்களும் பட்டினியின் விளிம்புக்கே தள்ளப்பட்டு விட்டனர். மேலை நாடுகளின் சுவைக்காக சீனியை உற்பத்தி செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட தோட்டங்களும், அந்த உற்பத்தியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களும் இன்று அவர்களுக்குத் தேவையில்லை.

சீனியைத் தயாரிப்பதற்கான கரும்பு வெல்லத்திற்கும், பீற் வெல்லத்திற்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(சுக்ரோசு) பதிலாக இன்று இந்தக்கம்பனிகள் புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளன. corn அல்லது cassava இல் இருந்து பெறப்படும் சீனியை அல்லது இதற்குப் பதிலாக தானியங்களிலிருந்து அல்லது உருளைக்கிழங்கிலிருந்து பெறப்படும் மாப்பொருளான அமிலேசு (amylase) என்ற நொதியத்தைப் பயன்படுத்திப் பெறப்படும் குளுக்கோஸை சீனிக்குப் பதிலாகப் பாவிக்கிறார்கள். அல்லது மற்றுமொரு உயிரியல் இரசாயன உற்பத்திப் பொருளான "aspartame" ஐப் பாவிக்கின்றனர்.

மாப்பொருளை (starch) குளுக்கோஸ், அல்லது பிரக்ரோஸ் ஆக மாற்றக்கூடிய மூன்று முக்கிய நொதியங்களில் 60 வீதமானவை இரண்டு பெரிய கம்பனிகளின் கட்டுப்பாட்டிற்குள் தான் உள்ளது. இன்று இரசாயனக் கம்பெனிகள்தான் உணவுக் கம்பனிகளாக மாறி வருகின்றன. உணவிற்குப் பாவிக்கும் எண்ணெய்களான தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய், சோயா எண்ணெய்களுக்குப் பதிலாக **UNILEVER** என்ற பாரிய கம்பனி நொதியங்கள், நுண்ணங்கிகள் மூலம் மேலே குறிப்பிட்ட எண்ணெய் வகைகளின் சுவையினையும், அதே குணாம்சங்களையும் கொண்டதாக **PALM OIL** என்ற எண்ணெயை உருவாக்கியுள்ளனர்.

முன்பு தெற்கு நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய்க்கு அநியாயமான மிகக் குறைந்த விலையையே கொடுத்தார்கள். இப்போது தேங்காய் ஒரு தேவையற்ற பொருளாகிவிட்டது.

இன்று தெற்கிலுள்ள விவசாயிகள் வடக்கிலுள்ள தொழிற்சாலைகளுடன் போட்டியிட வேண்டியுள்ளது. பெரும் கம்பனிகள் உயிரியல் நுண்முறைகளை சகல உணவு வளங்கள் மீதும் பாவிக்க ஆரம்பித்து விட்டன. மேலும் இவற்றை நீண்ட காலத்திற்குத் தாங்கள் மட்டுமே பாவிக்க முடியும் என்ற பிரத்தியேக அதிகார உரிமையை(patent rights) யும் சட்டரீதியாகப் பெற்றுக் கொண்டு வருகின்றன.

உணவுப்பயிர்களில் மட்டுமல்லாது மரங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் விதைகளின் குணாம்சங்களையும் மாற்றியமைத்து வருகின்றனர். மொன்சான்ரோ (MONSANTO) போன்ற கம்பனிகள் களைகொல்லிகளால் (herbicides) தாக்கப்பட முடியாத விதைகளை உற்பத்தி செய்கிறார்கள்.

### உயிரினங்கள் மீது உரிமை கோருவதா?

இன்றுவரையும் "உயிரினங்கள்" (living organisms) பொதுப் பாரம்பரியம் என்றுதான் பரவலாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.அதாவது இந்த உயிரினங்களின் மீது யாரும் தனிப்பட்ட உரிமையைக் கோர முடியாது என்பதுதான். ஆனால் இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிரினங்கள் மீதே அதிகார உரிமை(patent) பெறும் அநியாயம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. மரங்களைப் பொறுத்தவரையில், சில வரையறைகளுக்குள், பிரத்தியேகமான சிலவற்றிற்கு 'அதிகார உரிமை' கள் வழங்கப்பட்டன. உயிரியல் நுண்முறைகள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் இன்றைய கட்டத்தில், பாரிய ராட்சஷ கம்பெனிகள் "உயிர்"களையும் (life form) தங்கள் சொத்தாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 1980ம் ஆண்டு அமெரிக்காவில் எண்ணெயை உட்கொள்ளும் "நிறமூர்த்தம்" (gene) மூலம் உற்பத்தி செய்த பக்ரீரியாவிற்கான 'அதிகார உரிமையை' அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். ஐரோப்பாவிலும் இதே போன்ற அதிகார உரிமைகள் வழங்கப்படுகின்றன. கடந்த சில வருடங்களில் நுண்ணங்கிகள், மரங்கள் அத்துடன் மிருகங்கள் என்பவற்றிற்கும் 'அதிகார உரிமைகள்' வழங்கப்பட்டுள்ளன.

இந்த உயிரியல் நுண்முறை அறிவு இராட்சஷ கம்பனிகளின் தனிச் சொத்தாக இன்று மாற்றப்பட்டு விட்டது. இந்த நுட்பங்களை மற்றவர்கள் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் எதுவும் இல்லை. களை கொல்லிகளுக்கும் வித்துக்களுக்கும் 'அதிகார உரிமை' என்பது சில ஏகபோக கம்பனிகளுக்கு வழங்கப்பட்டு விட்ட காரணத்தினால்- மேலை நாடுகளிலுள்ள சில ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியாகும் களை கொல்லிகளையும், வித்துக்களையும் நம்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்று விவசாயிகளின் மீது திணிக்கப்பட்டுள்ளது. உலகின் இன்று பல பகுதிகளிலும் மேற்கத்தைய விவசாய முறைகளே பெரிதும் கையாளப்பட்டு வருகின்றன. விந்தையான முறையில் கூடிய விளைச்சல் தரும், அதனுடன் தொடர்புள்ள இரசாயன முறைப்படி உருவான உரவகைகள் மற்றும் கிருமிநாசினிகளையுமே இவர்கள் பாவிக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

இன்று உலகில் நாம் காண நேர்ந்துள்ள பல்வகைத் தானியங்கள், மரங்கள், மிருகங்கள் பற்றி பல நூற்றாண்டுகளாக தேடிப்பெறப்பட்ட அனுபவமும் அறிவும் இன்று உலகிற்கு பிரதியுபகாரம் எதுவுமில்லாமல் வழங்கப்பட்டுள்ளன என்றால் அது மூன்றாம் உலகைச் சேர்ந்த விவசாயிகளால்தான் என்று கூறினால் அது முழுவதும் பொருந்தும்.

இந்த அடிப்படை ஆதாரம்தான் உலக மக்களுக்கு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மட்டுமன்றி பல்வேறு பட்ட தானியங்களை வளர்ப்பதற்கும் மிகுந்த உத்தரவாதம் அளித்து வந்தது.

இலங்கையில் 30 வருஷங்களுக்கு முன்பு 2000ற்கு மேற்பட்ட தானியங்களின் உற்பத்தி செய்முறையில் இருந்துள்ளன. இப்போது 5 வகையான தானிய உற்பத்திதான் நடைபெறுகிறது. மற்றவை எல்லாம் அழிந்தும், அழிந்து போகிற ஆபத்தை எதிர் நோக்கிய நிலையிலும் தான் உள்ளன.

www.tamilarangam.net

மனுக்குலத்தின் பொதுச்சொத்து

மூன்றாம் உலக நாடுகளின் பாரம்பரியச் சொத்தான - பல நூற்றாண்டுகளாக தம் சொந்த அறிவின், அனுபவத்தின் மூலம் வளர்த்தெடுத்த பலவிதமான தானியங்களையும் மேற்கத்தைய நாடுகள் அழித்தொழித்துவிட்டு, இப்பொழுது அந்த உணவினங்களில் சில மாறுதல்களைச் செய்துவிட்டு அவற்றிற்கு அதிகார உரிமை கோரி நிற்கிறார்கள். இந்த அதிகார உரிமை மூன்றாம் உலக நாடுகட்கு இழைக்கப்படும் மிகப் பெரிய அநியாயமாகும்.

'அதிகார உரிமை' செய்யப்பட்ட விதையைப் பாவிக்கும் விவசாயி, அந்தக் குறிக்கப்பட்ட விதையைப் பாவிப்பதற்கு எந்தக் கம்பெனிக்கு 'அதிகார உரிமை' வழங்கப்பட்டுள்ளதோ அந்தக் கம்பெனிக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைக்காக அதற்கு குறிக்கப்பட்ட பணம் செலுத்தினால் மட்டுமே அந்த விதையைத் திரும்பவும் பாவிக்க முடியும்.

ஒரு பண்ணை விவசாயி hybrid இனச் சேர்க்கை மூலம் ஒரு பசுவிற்குப் பிறந்த கன்றிற்கு உரிமையாளன் தான் அல்ல, அந்தக் கன்றிற்கு உரிமை கோரக் கூடியது அதற்கான 'அதிகார உரிமையை' பெற்ற கம்பெனிதான் என்பதை அறிவார்; அறிந்திருக்க வேண்டும்.

நிறமூர்த்தங்கள் (Genes) உலக மக்கள் அனைவரினதும் சொந்தப் பாரம்பரியம் என்பது அழிந்து கொண்டு போகிறது. தாராளப் பொருளாதாரக் கொள்கை மூலம் இராக்ஷஸ கம்பெனிகள் பாரம்பரிய வளங்களை காலனித்துவ மயமாக்கிக் கொண்டு போவதுதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மூன்றாம் உலக நாடுகள் உயிரினங்கள் தொடர்பான தமது நூற்றாண்டு கால அநுபவங்களும் கண்டு பிடிப்புக்களும் பொதுவான மனுக்குலம் சார்ந்தன என்பதால் அதனை உலக மக்களின் பாரம்பரியம் எனக் கருதி அவற்றை மேலை நாடுகளுக்கு இலவசமாகவே வழங்கின. ஆனால் இன்று சில ஏகபோக கம்பெனிகள் இப்படி இலவசமாகக் கிடைத்த அடிப்படையான மூலப் பொருட்களில் தங்களது ஆராய்ச்சி நிலையங்களில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்திவிட்டு அவற்றைத் தமது சொத்தாக அபகரிக்கும் ஆபத்து இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

இந்த உயிரியல் நுண்முறைகளின் அதிகார உரிமையானது புதிய உலக ஒழுங்கின் கீழ் மூன்றாம் உலக நாடுகளை சில ஏகபோக கம்பெனிகள் சுரண்டுவதற்கு முழுப்பாதுகாப்பையும் வழங்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஆஇ

இன்று மானிடத்தின் மீது ஏற்றப்படுகின்ற சுமைகள் பல. அவற்றிலிலும் சூழல் மீதுள்ள அக்கறையீனம் - எதிர்காலத்திலும் இன்றும் சூழல் பாதுகாப்பின்மையால் ஏற்படுகின்ற மாற்றங்கள் - இந்த மானிடத்தின் மீது பெரும் சுமையாகவே உள்ளது. உலகில் இன்று சூழல் பாதுகாப்பை - காற்றையும், நீரையும், வெப்பத்தையும், இயற்கை வழங்களையும் பாதுகாப்பது எப்படி என்ற அச்சமே மேலோங்கியுள்ளது. பல்வேறு விதமான உலக அரசியல் நிலமைகளும், இலாபமும், சுரண்டலும், யுத்தமும் - சூழல் மீது ஒரு கொடூரமான பாச்சலை ஏற்படுத்தி பின்னடைவிற்கே கொண்டு செல்கிறது.

இந்த எண்ணங்களோடே நாம் - தமிழில் சூழல் பற்றியதான ஒரு அக்கறையையும், அவைபற்றியதான ஒரு அறிமுகத்தையும் ஏற்படுத்தும் முகமாக இவ்விதழை சூழல் சிறப்பு இதழாக வெளியிடுகிறோம். அண்மைக்காலமா தமிழில் பல சிறு சஞ்சிகைகள் மூலமும், கருத்தரங்கங்களுக்கூடாகவும் சூழல் பற்றியதான பல்வேறு அக்கறைகள் ஏற்பட்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது.

ஆசிரியகுழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இறைச்சியும்... மேற்குலகமும் நாமும்



**வாணிதாசன்**

ஆதிகாலத்தில் இருந்தே மனிதன் மாமிசத்தைப் புசித்து வந்திருக்கிறான். இன்றும் அவன் மாமிசம் புசிப்பதை விட்டபாடில்லை. அன்று மாமிசமே அவனுடைய பிரதான உணவாக இருந்தது. நாகரிக வளர்ச்சி அடைய அடைய ஆற்றங்கரைகளிலும் நீர் நிலைகளை அண்டிய பகுதிகளிலும் நிரந்தர குடியிருப்புக்களை அமைத்துத் தானிய

www.tamilarangam.net

உற்பத்தியிலும் தானிய உணவிலும் ஆதிமனிதன் ஈடுபாடு கொண்டான். ஆதியில் அவனுடைய பிரதான உணவாக இருந்த மாமிசத்திலிருந்து அவன் தானிய உணவு வகைக்கு மாறியமைக்கு இரண்டு, முக்கிய காரணங்களைக் கூறலாம். ஒன்று தனித்து மாமிசத்தை மட்டுமே உண்டு அவன் சலிப்படைந்து போயிருக்கலாம். அல்லது தனியே மாமிசத்தை மட்டும் தொடர்ந்து புசித்து வருவதால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளையும் பக்க விளைவுகளையும் (post & side effect) தானே அனுபவத்தில் கண்டும் உணர்ந்தும் இருக்கலாம். இதில் மாமிசத்தை மட்டுமே உண்டு சலித்துப் போயிருக்கலாம் என்ற வாதத்தை நாம் தள்ளிவிடலாம். ஏனெனில் மாமிச பட்சணிகளான சிங்கம், புலி போன்றன இன்னும் மாமிசத்தை மட்டுமே உணவாகக் கொண்டுள்ளன. இரண்டாவது, சனத்தொகைப் பெருக்கத்திற்கேற்ப மாமிச உணவானது அவனது தேவையின் அளவிற்கு போதுமானதாக அகப்படாமல் இருந்திருக்கலாம்.

எது எப்பிடியிருப்பினும், பகுத்தறிவுள்ள மனிதனுக்கு அவன் கண்டும், உணர்ந்தும், அனுபவித்தும் உள்ள பக்க விளைவுகளே அவனுடைய மாற்றத்திற்கான முக்கிய காரணியாகத் தோன்றுகிறது.

## மாமிசத்துக்காக மிருகவளர்ப்பு

உணவு உற்பத்திக்காக காடுகள் அழிக்கப்பட்டு இயற்கைச் சமநிலையானது சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நமக்குத் தேவையான உணவு வகைகளை நாமே பயிரிடவும், மாமிச உணவிற்காக விலங்குகளை வளர்க்கவும் வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டது. மூன்றாம் உலக நாடுகளின் சேனைப் பயிர்ச்செய்கை மூலம் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டுத் தானிய வகைகள் பயிரிடப்படுகின்றன' ஆனால் கால்நடை உற்பத்திக்காகப் பெருமளவு மந்தை மேய்ச்சல் வெளிகள் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக கால்நடைகள் சிறு அளவிலேயே வளர்க்கப்படுகின்றன. மூன்றாம் உலக நாடுகளின் உணவுத்தேவை பிரதானமாகத் தானிய வகைகளிலேயே சார்ந்து நிற்கிறது. அவர்களின் உணவில் மாமிசம் ஒரு வருடத்தில் ஒருவருக்கு 3.8 கிலோ கிராம் மட்டுமே கிடைக்கக் கூடியதாக உள்ளது என்பதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் ஒருவர் ஒரு வருடத்தில் சராசரியாக 100 கிலோ கிராம் மாமிசத்தை உண்ணுகிறார். இதனால் இவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நவீன தொழில் நுட்பங்களுடனும், சாதனங்களுடனும் குறைந்த செலவில் பெருமளவு மாமிசத்தை உற்பத்தி செய்ய மேற்கு நாடுகள் முற்பட்டன.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னரே பெரும் தொகையான

www.tamilarangam.net

மிருகங்களைச் சிறிய இடங்களில் வளர்க்கும் முறை அறிமுகப் படுத்தப்பட்டது. இந்நேரத்தில் மாமிசத்தின் உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டிய தேவை இருந்தது. அன்றைய விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் மாமிசம் மனித வளர்ச்சிக்கு ஒரு முக்கியமான உணவெனக் கருதியதுடன் மாமிசத்தின் மூலமாகத்தான் மனிதனுக்குத் தேவையான அனைத்து சத்துப் பொருட்களையும் (உயிர்ச்சத்து, புரதம், இலிப்பிட்டுக்கள், தாதுப்பொருட்கள் போன்றன) பெற முடியும் என்ற கருத்துக்களையும் வெளியிட்டனர். இதன் மூலம் பெருந்தொகையான பணத்தைச் சம்பாதிக்க முடியுமென்பதையும் அன்றைய அமெரிக்காவின் முதலாளித்துவ ஸ்தாபனங்கள் நன்கு அறிந்து கொண்டன. இதன் காரணமாக பெரிய எண்ணெய் ஸ்தாபனங்களும், காப்புறுதி ஸ்தாபனங்களும் பெரும் தொகையாக மிருகங்களை வளர்க்கும் முறைகளை உருவாக்கினார்கள். அத்துடன் கோதுமை, சோளம் ஆகியவற்றைக் கொண்டு குறுகிய காலத்தில் மிருகங்களின் பருமனையும், நிறையையும் அதிகரித்து அதிக இலாபம் அடையும் முறையையும் கண்டறிந்தனர். இதனால் இவர்கள் மிகச் சிறிய சிறிய இடங்களில் பெரும்தொகையான மிருகங்களை வளர்க்கத் தொடங்கினார்கள். இவர்களின் முக்கிய நோக்கம் அதிக மிருகங்களை வளர்த்து அதிக இலாபம் அடைவதே ஆகும். ஆனால் இதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும், சுற்றுச் சூழலுக்கு அதனால் ஏற்படும் தாக்கங்களையும் பற்றி இவர்கள் அறிந்து கொள்ள முயற்சிக்கவும் இல்லை; விரும்பவும் இல்லை. இம்முறை நாளடைவில் ஐரோப்பாவிற்குப் பரவியதுமல்லாமல், மேலும் மிகச் சிறிய இடங்களில் பெரும் தொகை மிருகங்களை வளர்க்கும் முறைக்கும் வித்திட்டது. பெரும்தொகையாகக் கூடுகளிலும், பட்டிகளிலும் அடைத்து வளர்க்கப்படும் மிருகங்களின் மாமிசத்தில் புரதச் சத்து அதிகம் இருந்தாலும், அதில் நமது உடலைப் பாதிக்கக்கூடியதும் சுற்றுச் சூழலை மாசுபடுத்தக் கூடியதுமான நச்சுப் பதார்த்தங்கள் அனேகம் கலந்துள்ளன. ஏனெனில் வன விலங்குகளின் மாமிசத்தில் கொழுப்புப் படிவங்கள் மிகவும் குறைவு அவை எந்நேரமும் உணவைத் தேடி அலைவதினால் ஏற்பட்ட தாக்கமாக இருக்கலாம். ஆராய்ச்சியாளர்களின் முடிவுகளின்படி மாமிச உணவுகளிலேயே முதன்மையானது வனவிலங்குகளின் மாமிசமும் அதற்கு அடுத்தபடியாக தன்னிச்சையாக தீன் தேடி உண்ணும் வளர்ப்புப் பிராணிகளும் இடம் பெறுகின்றன.

தொகையான மிருகங்களை சிறிய கூடுகளில் அடைத்து வளர்ப்பதன் மூலம் மிருகங்களின் இயற்கையான நடமாட்டம் தடைப்படுகிறது. அத்துடன் அவற்றின் கழிவுகளும் தேங்குகின்றன. இதனால் அவை நோய்வாய்ப்பட்டு இளமையிலேயே மடியவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதைத்தடுப்பதற்காக பெருமளவு நுண்ணுயிர்க் கொல்லிகளையும் ( antibiotics) சாந்தப்படுத்தும் மருந்து வகைகளையும் (tranquillizer) மிருகங்களின் உணவுடன் கலந்து கொடுத்து வருகிறார்கள். இம்முறையானது மாமிசத்தைப் பெருமளவு உற்பத்தி செய்ய உதவினாலும், இம்மருந்துகளின் தாக்கங்களும் அவற்றின் எச்ச சொச்சங்களும் மிருகங்களுக்கும், அதை உணவாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உட்கொள்ளும் மனிதனுக்கும் தொடர் தாக்கத்தையே ஏற்படுத்துகின்றன. உதாரணமாக நுண்ணுயிர் கொல்லிகள் (antibiotics) மிருகங்களின் குடலில் வாழும் சாதாரணமான, நன்மை தரக்கூடிய நுண்ணுயிர்களைத் (bacteria) தாக்கி அழித்து அவ்விடங்களில் தீமை தரக்கூடிய நுண்ணுயிர்கள் வளர இடம் கொடுப்பதால், விலங்குகளுக்கு அவை உற்பத்தி செய்யும் விற்றமின்களும் கிடையாமல் போவதோடு குடல் நோய்களும் ஏற்பட ஏதுவாகிறது. மேலும் இவ்வகையான நுண்ணுயிர்க்கொல்லிகள் பாலின் ஊடாக வெளியேற்றப்படக் கூடியவையாகையால் பாலை உட்கொள்ளும் சிறுபிள்ளைகளுக்கு இந்த நோய்கள் தேவையற்ற முறையில் சென்றடைகின்றன. இதனால் சிறுவர்களின் உடலிலுள்ள நுண்ணுயிர்கள் அம்மருந்துகளுக்கு எதிர்ப்புச் சக்தியை உண்டாக்க ஏதுவாகின்றது. சாந்தப்படுத்தும் மருந்துகள் (Tranquillizer) மிருகங்களின் மூளையிலுள்ள திருப்திப்படுத்தும் மையத்தில் (Satiatic centre) தாக்கத்தை ஏற்படுத்துவதால் அவை எந்நேரமும் உணவை உட்கொண்டபடியே இருக்கும். அதனால் அவை குறுகிய காலத்தில் பருமனும் எடையும் அதிகரிப்பதோடு மேலதிக உணவு கொழுப்பாகவும் கொலஸ்ரோல் ஆகவும் (cholesterol) செறிவற்ற கொழுப்பமிலங்களாகவும் (unsaturated fatty acid) மிருகங்களின் உடலில் சேமித்துவைக்கப்படுகின்றன. இவ்வகைப் பொருட்கள் மனிதனுக்கு இருதய வியாதிகளையும் இரத்த அமுக்க வியாதிகளையும் ஏற்படுத்தும் முக்கிய காரணிகளாக உள்ளன.

இவ்வகையில் பெருமளவு விலங்குகளை வளர்க்க முற்படும் போது அவற்றுக்குத் தேவையான உணவு வகைகளும் பெருமளவில் தேவைப்படுகின்றது. கால்நடைகளின் வளர்ப்பின் முக்கிய தேவையாக கோதுமை,சோளம், சோயா, எண்ணைவித்து, வகைகளே உணவாகப் பயன்படுத்தப்படுகின்றது. மாடுவளர்ப்பில் ஒரு கிலோ இறைச்சியைப் பெறுவதற்காக 16 கிலோ கோதுமையும் அதனுடன் எண்ணைவித்து, சோளம், சோயா போன்றனவும் தேவைப்படுகின்றது. இதில் ஏறத்தாழ 15 கிலோ உணவு வகைகள் விலங்கின் எரிபொருளாக்கத்துக்கும் (Energy production) மிகுதி கழிவுப் பொருளாகவும் வெளியேற்றப்படுகின்றது. போசணைக்குத் தேவையான முக்கிய மூலப்பொருட்களாகிய சோயா, சோளம், கோதுமை, எண்ணைவித்துக்கள் என்பன பெரும்பாலும் பிரேசில் போன்ற 3 ம் உலக நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு மலிவான விலையில் மேற்குலக நாடுகளால் வாங்கப்படுகிறது.

## மிருகவளர்ப்புக்காக தேவைப்படும் தானியவகைகளை பெருந்தொகையாக பயிரிடுவதால் ஏற்படும் தாக்கம்

சிறிதளவு அன்னியச்செலாவணியை ஈட்டித்தரும் என்ற காரணத்துக்காக 3 ம் உலக நாடுகள் தத்தமது நாடுகளிலுள்ள செழிப்பான பிரதேசங்களையும், காடுகளையும்

www.tamilarangam.net

அழித்து மேலைநாடுகளின் மிருகவளர்ப்புக்காக தேவைப்படும் தானிய வகைகளை பெருந்தொகையில் பயிர்செய்யத் தமது காணிகளைப் பயன்படுத்துகிறார்கள். இதனால் விலங்குகளின் வளர்ச்சிக்காக இயற்கையின் சமநிலையையே பாதிக்கச்செய்கின்ற ஒரு நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படுகின்றார்கள். காடுகளை அழிப்பதனால் மழைவீழ்ச்சி குன்றி அந்நாடுகள் வரண்ட பிரதேசங்களாகின்றன. அத்துடன் காடுகள் இல்லாததால் நில அரிப்பு ஏற்படுவதோடு நீர் தேங்கிநிற்காது வழிந்தோடுவதால் மேல் மண்ணில் உள்ள கனிமங்களையும் கழுவி கடலுக்குக் கொண்டு போவதோடு நிலத்தடி நீரின் அளவையும் குறைக்கின்றது. இது நாளடைவில் மண்ணின் செழிப்புத் தன்மையைக் குறைப்பதோடு விளைச்சலையும் குறைக்கின்றது. மழைவீழ்ச்சி குறைவதால் விவசாயத்துக்கு நிலத்தடி நீரைப் பாவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டே போகையில் தொடர்ந்தும் நிலத்தடி நீர் மேலெடுக்கப்படுவதனால் நிலத்தடி நீர்மட்ட 'ஹைபண்பேர்க்கின்' வடிவம் சிதைவடைந்து கீழ் உள்ள உவர் நீர் நன்னீருடன் கலக்கின்றது. இதனால் இந்நீர் உவராவதோடு மட்டுமல்லாது அதனால் பயிர்செய்கை பண்ணப்படும் நிலமும் நாளடைவில் உவராக மாறுகின்றது. 'ஹைபண்பேர்க்' கின் கூற்றுப்படி நிலத்தடி நீரின் மட்டம் ஒரு அடி உயரம் வேகமாகக் குறையும் போது உவர் நீர் 32 அடி உயர நீரமுக்கத்துக்கு மேல் எழுந்து நன்னீருடன் கலக்கின்றது. மேலும் பயிர்கள் பெருவிஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்படுவதாலும் சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை செய்யமுடியாதிருப்பதாலும் மண்ணின் (Ph) தன்மை மாறுபடுகின்றது.

இவற்றை நிவர்த்தி செய்வதற்காக நவீன செயற்கை உரங்களையும் பூச்சிகொல்லி மருந்துகளையும் அதிக அளவில் பாவிக்க வேண்டியதாயிற்று. இவைகள் அனைத்துமே பெரும்பாலும் மேலை நாடுகளிலிருந்தே அன்னியச்செலவாணி மூலம் 3 ம் உலக நாடுகளால் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதிக அளவில் செயற்கை உரங்களைப் பாவிப்பதால் மண்ணின் தன்மை மாறுபட்டு அதில் அமிலத்தன்மை அதிகமாகின்றது. இதனால் செடிகொடிகளும் வேகமாக வளருகின்றன. இவை வேகமாக வளருவதால் அவற்றின் நோய் எதிர்ப்புச்சக்தி மாறுபட்டு அதிக அளவில் கிருமிநாசினிகளைப் பயன்படுத்தும் தேவையும் ஏற்படுகின்றது. மண்ணின் தன்மை மாறுபடுவதால் இயற்கையாகவே மண்ணிலுள்ள நைதரசன் உற்பத்தி செய்யும் நுண்ணங்கிகளும் (Nitrogen producing organism) மடிகின்றன. அழுகல்வளரிகள் பாதிக்கப்படுவதால் செடிகொடிகளின் காய்ந்த இலைகளும் குப்பைகளும் இலகுவில் உக்கிப் போகமுடியாதிருப்பதுடன் அவற்றை மரங்கள் மீண்டும் பயன்படுத்தமுடியாது போகின்றது. மண்ணின் அமிலத்தன்மை மாறுபடுவதால் தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையாகிய முக்கிய கனிமங்களாகிய கல்சியம், பொஸ்பரஸ், மங்கனீஸ், கந்தகம் போன்றவை நீரில் கரையும் தன்மையற்றவையாக மாறுவதால் தாவரங்களால் உறிஞ்சப்பட முடியாதவையாக உள்ளன. செயற்கை உரங்களிலுள்ள தாவரங்களால் பாவிக்கப்படாத மேலதிக நைதரசன் பொருட்கள், பொஸ்பேற், சல்பர் போன்றவற்றின் ஒரு பகுதி நிலத்தடி நீரை சென்றடைகின்றது. ஒரு பகுதி அடித்துச் செல்லப்படும் மழை நீரோடு கலந்து ஆறு, குளம், குட்டை, கடல் போன்றவற்றைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்றடைகின்றன. இவற்றின் சேர்க்கையால் நிலத்தடிநீரின் நைதரசன் செறிவு அதிகரிக்கின்றது. இந்நீரைப் பாவிப்பதால் மனிதனுக்குப் பல தீமையான விளைவுகள் ஏற்படுகின்றது. குறிப்பாகக் குழந்தைகளுக்கு அதிகஅளவு நைதரசன் பொருட்கள் ஆபத்தை விளைவிக்கின்றன. இவை குழந்தைகளின் செங்குருதிச் சிறுதுணிக்கைகளை (Red corpuscells) பாதிக்கின்றன. செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் எண்ணிக்கையையும் பெருக்கத்தையும் குறைக்கின்றன. இதனால் குழந்தைகளுக்கு இரத்தசோகை உண்டாகி அதன் விளைவாக இழையங்களுக்கு ஒட்சிசன் கடத்தல் குறைவதால் மூளை வளர்ச்சியும் பாதிப்படைகின்றன.

குளம் குட்டைகளில் நைதரசன், பொஸ்பேற் ஆகியவற்றின் செறிவு அதிகரிப்பதனால் பாசிகளின் (அல்காக்கள்) வளர்ச்சி அளவுக்கு அதிகமாகப் பெருகுகின்றது. இவை நீரில் கரைந்திருக்கும் ஒட்சிசனைப் பாவிப்பதால் நீரில் ஒட்சிசனின் அளவு குறைகின்றது. இதனால் ஒட்சிசனை நம்பிவாழும் உயிரினங்கள் மடிகின்றன. அத்தோடு ஒட்சிசன் இல்லாமல் வாழும் உயிரினங்கள் (Anaerobic Organism) பல்கிப் பெருகுகின்றன. இதுவும் குளம் குட்டைகளின் இயற்கைச் சமநிலையை பாதிப்படைய வைக்கின்றது. இதேபோன்று குட்டைக்கடல்களிலும் பரவைக்கடல்களிலும் நடைபெறுகின்றது. பாசிகளின் அழுகலினால் வெளியிடப்படும் மீதேன் (Methane) வாயு நீரில் கரைவதாலும் உயிரினங்களுக்கு பாதிப்பு உண்டாகின்றது. சூரியவெப்பத்தினால் மேலெழும் மீதேன் வாயுவினால் வளிமண்டலமும் மாசடைகின்றது. மேலும் மண்ணின் தன்மை மாறுபடுவதனால் இயற்கை உழவன் ஆகிய மண்புழு (Earthworm) செத்து மடிவதால் மண்ணிற்குள் ஏற்படுத்தப்படும் மயிர்த்துளைக் காற்றோட்டம் (Capillary aeration) தடைப்படுத்தப்பட்டு தாவர வேர்களின் சுவாசத்துக்கும் நுண்ணுயிர்களுக்கும் ஒட்சிசன் கிடைக்காமல் போய்விடுகின்றது.

## பூச்சிகொல்லி மருந்துவகைகளின் பாவனையும் அதன் தாக்கமும்

அனேகமான பூச்சிகொல்லி மருந்துகளிலும் முக்கியமாகப் பங்கசு கொல்லிகளிலும் பாரலோகங்கள் (Heavy metals) சேர்க்கப்பட்டுள்ளன. சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள W.H.O (World Health Organisation) அறிக்கையின்படி குடிநீரை மாசுபடுத்தும் முக்கியகாரணியாக இப்பூச்சிகொல்லிமருந்துகளே உள்ளன. இப்பூச்சிகொல்லிமருந்துகளின் செயற்பாட்டு முறைகள் பற்றி விளங்கிக்கொள்வது இதனுடைய தாக்கங்கள் பற்றிய பரந்த அளவிலான அறிவையும் அதனால் ஏற்படக்கூடிய நேரடியான பின்விளைவுகள் எவ்வளவு பாரதூரமானவை என்பதையும் தெளிவுபடுத்தும். அனேகமான பூச்சிகொல்லிமருந்துகள் சேதனரசாயன (Organo chemical) வகுப்பைச் சார்ந்தவை. இவற்றின் முக்கிய கூட்டுப்பொருட்களாக பிஸ்மத், அற்றிமணி, துத்தநாகம், பாதரசம், இரும்பு, தகரம் போன்ற பார லோகங்களும் கந்தகம்,

www.tamilarangam.net

பொஸ்பரஸ், குளோரின், புறோமின், சயனைட் போன்ற அலோகங்களும் சேர்ந்துள்ளன. இப்பூச்சிகொல்லிமருந்துகள் பின்வரும் முறைகளில் ஏதாவது ஒரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

1. கலச்சுவர் சிதைவடைதலும் அதனால் ஊடுபுகும் தன்மையை (Permeability) மாற்றுதலும்
2. ஒட்சிசன் பயன்பாட்டைத் தடைசெய்தல்
3. நொதியத்தை தடைசெய்தல் (Enzyme blockage)
4. ஊக்கிகளை தடைசெய்தலும் திசைதிருப்பலும்
5. கருவின் மூலப்பொருட்களான DNA,RNA நியுக்கிளிக் அமிலங்களின் கட்டமைப்பை மாற்றலும் உற்பத்தியை தடைசெய்தலும்
6. போட்டித்தடைகள் மூலமும் (Competetive inhibition) சில சுரப்பிகளின் தூண்டுதலாலும் இனப்பெருக்கத்தை தடைசெய்தலும்

இக்கிருமிநாசினிகளும் அவற்றின் கூட்டுப்பொருளாகிய பாரலோகங்களும் மாசடைந்த நீர் மூலமாகவோ அன்றி மாமிசம் மூலமாகவோ மனிதனை அடையும்போது மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு வழியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இப்பூச்சிகொல்லிகளின் பாவனை தேவையற்ற கிருமிகளைவிட பல பயன்பாடுள்ள பறவைகள் தேனீக்கள் போன்ற உயிரினங்களையும் அழிப்பதன் மூலம் இயற்கைச்சமநிலையை சீர்குலைக்கிறது. இக்கிருமிநாசினிகளில் சில நேரடியாகவே பூச்சி புழுக்களைத் தாக்குகின்றன. சில தாவரங்களால் உறிஞ்சப்பட்டு பின் பூச்சி புழுக்களைத் தாக்குகின்றன. மேலதிகமான கிருமிநாசினிகளும், கழுவுப்பட்டு நிலத்தை அடையும் கிருமிநாசினிகளும் நிலத்தடி நீரை அடைந்து குடிநீரை மாசுபடுத்துகின்றன.

இவ்வாறு பெருந்தொகையாக மிருகங்களை வளர்க்கும் போது செயற்கை உரத்தையும் கிருமிநாசினிகளையும் பாவித்து வளர்க்கப்பட்ட தாவர உணவு வகைகளையே பெருமளவில் கால்நடைகளுக்குத் தீனியாகப் பயன்படுத்துகின்றோம் என்பது தெளிவாகின்றது. கால்நடைகளின் போசணைக்கு உபயோகிக்கப்படும் தாவர, தானிய வகைகளில் மேற்குறிப்பிட்ட பார உலோகங்களும் சேதன இரசாயன கலவைகளும் சிறிய அளவிலேயே காணப்பட்டாலும், ஒவ்வொரு வளர்ப்பு மிருகமும் பெருந்தொகையான தாவர, தானிய உணவுகளை உண்பதனால் அவற்றில் உள்ள பார உலோகங்களும் சேதன இரசாயன கலவைகளும் செறிவடைந்த நிலையில் அவற்றின் சிறுநீரகம், மூளை, ஈரல், தசைகள், தோல் மற்றும் கொழுப்பு ஆகிய பகுதிகளில் படிகின்றன. இவ்வாறு செயற்கை முறையில் வளர்க்கப்பட்ட மிருகங்களின் மாமிசங்களை உண்பதனால் மனிதருக்கு பல்வேறு நோய்கள் உண்டாகின்றன. கொழுப்பு, கொலஸ்ரறோல், செறிவற்ற கொழுப்பமிலங்களைக் கொண்ட மாமிசங்களினால் இருதயநோய், இரத்தஅழுத்தம், சடுதிமயக்கம், பாரிசவாதம் போன்ற நோய்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்டாகின்றன. புரதப் பொருட்களை மட்டும் விகிதாசாரத்துக்கு அதிகமாக உட்கொள்வதால் கீல்வாதம் (Gout), மூட்டுவாதம் (Rheumatism), குடல் சம்பந்தமான நோய்கள் மற்றும் குழந்தைகளுக்கு தோல்நரம்புஅழற்சி (Neurodermatitis) போன்ற நோய்களும் உண்டாக ஏதுவாகின்றன. கொழுப்புச்சத்துள்ள உணவுகளை அதிகமாக உட்கொள்ளும் போது உடல் பருமனாவதோடு கொலஸ்ரறோல் எனப்படும் பொருள் இரத்தக்குழாய்களில் படிந்து முக்கிய உறுப்புகளுக்கு இரத்தோட்டம் குறைவதோடு தோலின் அடிப்பாகத்தில் கொழுப்புக்கட்டிகளும் தோன்ற இடமளிக்கின்றது. பாரஉலோகங்களால் முக்கியமாக மூளையும், சிறுநீரகமும், ஈரலும் பாதிக்கப்படுகின்றன. இதனால் காக்கைவலி (Epilepsy), சிறுநீரகம் செயலிழத்தல் (Renal failure) போன்ற நோய்களும், இவ்வுலோகங்கள் கொழுப்புப் படையிலும் தோலின் அடிப்பாகத்திலும் படிவதால் மயிர் உதிர்தல், இளநரை உண்டாதல், தோல்அழற்சி, நகங்கள் வெடித்து உடைதல் போன்ற நோய்களும் உண்டாகின்றன. இத்தோடு சேதன இரசாயனச் சேர்க்கையும் சேர்ந்து கொள்ளும்போது ஈரல்அழற்சி (Hepatitis), தசைநார்அழற்சி (Myositis), மூளைவளர்ச்சி குன்றுதல் போன்ற நோய்களும், சூலகம், விதை போன்ற உறுப்புக்களைத் தாக்கி மலட்டுத்தன்மையையும் விளைவிக்கின்றன. அத்தோடு சரியாக வேகவைக்காமல் உண்ணும் மாமிச உணவினால் பலவிதமான ஒட்டுண்ணி நோய்களும் உண்டாகின்றன.

## கால்நடைக்கழிவுகளினாலும் அவற்றில் இருந்து வெளிப்படும் நச்சு வாயுக்களினாலும் ஏற்படும் தாக்கங்கள்:

உதாரணமாக 50,000 மாடுகள் வளர்க்கப்படும் ஒரு பட்டியில் 10 மில்லியன் லிற்றர் கழிவுகள் கிடைக்கின்றன. இக்கழிவுகளில் பாரஉலோகங்களும், பெருமளவு நைதரசன் பொருட்களும் இருப்பதால் இவை விரைவில் உக்கலாக முடியாத காரணத்தினால் மண்ணின் மீள்வளத் தன்மைக்கு ஏற்புடையதாக இல்லை. அதனால் அதன் ஒரு பகுதிதான் நிலத்தடி நீரைச் சென்றடைகின்றது. மற்றொருபகுதி மீதேன், நைதரொக்சைட்டு, அமோனியா போன்ற வாயுக்களாக வளிமண்டலத்தில் கலந்து மீண்டும் அமில மழையாக பூமியை வந்தடைகின்றது. இதனால் மரங்கள் செடிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றன. நெதர்லாந்திலுள்ள கமத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி சர்வகலாசாலையினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி அமிலமழை பெய்தலும் மண்ணின்தன்மை மாறுபடுதலும் காடுகள் அழிவதற்கு முக்கியகாரணம் எனக்கூறுகிறது. அதுமட்டுமன்றி ஐரோப்பாவில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் அழிவதற்கு இந்த அமிலமழையே காரணம் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வளிமண்டலம் மாசடைதல் என்பது ஐரோப்பாவுடன் மட்டும் நின்றுவிடவில்லை. முழு வளிமண்டலத்தையுமே மாசடையச் செய்கின்றது. இதனால் உலகின் எல்லாப் பகுதிகளுமே பாதிப்படைகின்றன என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தங்கி வாழும் வாழ்க்கை வட்டம்:

ஜேர்மனியில் 1986 ல் எடுக்கப்பட்ட புள்ளிவிபரப்படி அங்கு ஒரு நாளுக்கு 110,000 பன்றிகளும், 40,000 மாடுகளும் இறைச்சிக்காக (கோழிகள், ஆடுகள் நீங்கலாக)வெட்டப்படுகின்றன. இந்த உற்பத்தியை மேம்படுத்த அரசாங்கமும் நிதியுதவி அளித்து ஊக்குவிக்கின்றது. இதே ஆண்டில் மட்டும் 650,000 தொன் மாட்டிறைச்சியும் 1.3 மில்லியன் தொன் வெண்ணைக்கட்டியும் (Butter) 770,000 தொன் பால்மாவும் சேமிப்புக்கிடங்குகளில் சேகரித்து வைக்கப்பட்டன. இறைச்சியை பதப்படுத்தி குளிரூட்டி வைப்பதற்கு மட்டும் 5.1 கோடி மார்க்குகளும் வெண்ணையையும் பால்மாவையும் சேமித்து வைப்பதற்கு 13.2 கோடி மார்க்குகளும் செலவிடப்பட்டது. இவ்வாறு மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் மாமிசமும் உபபொருட்களும் மூன்றாம் உலக நாடுகளையே மீண்டும் சென்றடைகின்றன. இதன்மூலம் இவர்கள் பெருந்தொகையான அன்னியச்செலாவணியைச் சம்பாதிக்கிறார்கள். இந்த ஆக்கிரமிப்புக்கு மூன்றாம் உலக நாடுகளில் வதியும் சிறிய விவசாயிகளால் தாக்குப் பிடிக்க முடிவதில்லை. இதனால் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டு திரும்பவும் இவர்களின் தேவைக்கேற்ற மூலப்பொருட்களையே செய்கை பண்ணவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. அத்துடன் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள மக்கள் மாமிசத்தால் ஏற்படும் நோய்களால் பாதிக்கப் படுவதுமல்லாமல் இரசாயன மருந்து வகைகளையும் இறக்குமதி செய்யவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இவ்வாறு இவர்களின் உழைப்பின் ஊதியம் மீண்டும் மேலைநாட்டவர்களையே சென்றடைவதால் என்றும் மேலைநாடுகளையே நம்பிவாழும் அல்லது தங்கிவாழும் வாழ்க்கை வட்டத்தில் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறார்கள்.

## உற்பத்தியும் வறுமையும்:

உலக தானிய உற்பத்தியில் கோதுமையில் மூன்றில் ஒரு பங்கும், எண்ணை வித்துக்களாகிய சூரியகாந்தி, சோயா என்பவற்றின் மூன்றில் இரண்டு பங்கும் உற்பத்தியாகும் பால்மாவில் மூன்றில் ஒரு பங்கும் கால்நடை உணவாகப் பயன்படுத்தப் படுகின்றன. FAO (Food and Agricultural Organisation) அறிக்கையின்படி ஒரு வருடத்தில் மூன்று மில்லியன் குழந்தைகள் உணவின்றி பட்டினியால் மடிகின்றார்கள். உலகிலே ஏற்பட்டுள்ள இயற்கையின் சீற்றங்களாலும், வரட்சியினாலும், யுத்தங்களினாலும் எண்ணற்ற உற்பத்தி செய்யும் மக்கள் உணவின்றி இறந்துகொண்டிருக்கிறார்கள். இப்படியிருக்கையில் உற்பத்தியின் பெரும்பகுதி மீண்டும் கால்நடைகளுக்கே பாவிக்கப்படுகின்றது. அமேசன், பிறேசில் போன்ற நாடுகளில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு மேய்ச்சல் நிலங்களாகவும் உபஉணவுப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களாகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக்கப்பட்டு கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இங்கு வளர்க்கப்படும் கால்நடைகளின் மாமிசம் நெஞ்சுப் பகுதிகளிலும் தொடைப்பகுதிகளிலும் இறைச்சித்துண்டங்களாக வெட்டப்பட்டு மேலைநாடுகளுக்கே அனுப்பப்படுகிறது. மிகுதி அரைக்கப்பட்டு வெவ்வேறு வடிவங்களில் மேலைநாட்டவரின் செல்லப் பிராணிகளான நாய் பூனை போன்றவற்றுக்கு உணவாகப் பயன்படுகின்றது. பிறேசிலின் கிழக்குப்பகுதி முழுவதும் சோயா பயிரிடப்பட்டும் அவை அங்குள்ள மக்களின் உணவுத்தேவைக்கு பயன்படுத்தப்படாமல் மேலைநாடுகளுக்கே கால்நடைத் தீனி தயாரிக்க அனுப்பிவைக்கப்படுகின்றது. இக்காரணங்களினால் அங்குள்ள மக்கள் தங்கள் பிரதான உணவை உற்பத்தி செய்ய போதிய நிலம் இல்லாமையால் நகரங்களை நாடி இடம்பெயர்ந்து சேரிகளில் வாழ்ந்து அல்லற்படுகிறார்கள்.

சுற்றுச்சூழல் மாசடைவதனால் ஏற்படுகின்ற வளிமண்டல அமைப்பின் மாறுபாட்டினால் ஓசோன் படலம் குறைந்து கொண்டே போகின்றது. இதனால் புவியின் சராசரி வெப்பநிலை இந்நூற்றாண்டின் இறுதியில் ஒரு பாகை சென்ரிகிறேற்றால் அதிகரிக்கும் என வானவியலாளர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இதன் விளைவாக வடதென் துருவங்களின் பனிப்படலங்கள் உருகி மந்தை வெளிகளின் விஸ்தீரணம் மேலும் அதிகமாகி கால்நடைப் பெருக்கத்துக்கு வழிசமைப்பதோடு ஒட்டுண்ணி நோய்களும் (Zoonotic diseases) மேலும் பரவும் அபாயம் உண்டென்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றார்கள். மூன்றாம் உலக நாடுகளில் உள்ள மக்களின் வறுமை நிலையைக் காட்டி முதலைக் கண்ணீர் விடும் மேற்குலக முதலாளித்துவ நாடுகள் மக்களின் உணவை அபகரித்து தங்களுக்குத் தேவையான கால்நடைகளை வளர்ப்பதையே கவனம் செலுத்துகிறார்கள் என்ற உண்மையை நாம் உணரவேண்டும்.

(இக்கட்டுரை ஆக்கத்தின் போது பயன்மிகு ஆலோசனைகள் வழங்கிய டாக்டர்.சாம்.இலங்கரத்தினம் அவர்களுக்கு என் நன்றி!)

## இப்போதுமா?

"காணித்தோம்பு ஒல்லாந்தரால் கடைசிமுறையாகத் திருத்தப்பட்ட காலம் கி.பி 1754 ம் ஆண்டென்பர். (டாக்டர் போ.பீரிஸ் இயற்றிய "இலங்கையும் ஒல்லாந்தரும்"– பக்கம் 77–, எனினும் நல்லூர் குறிச்சித்தோம்பு 1787 ம் ஆண்டிலும் திருத்தப்பட்டது அத்தோம்பில் குறிக்கப்பட்டிருக்கிறது) இங்ஙனம் திருத்தப்பட்ட ஒல்லாந்தருடைய தோம்பை படியெடுத்தெழுதிய ஓலைச் சுவடிகள் இப்போதும் யாழ்ப்பாணக்கச்சேரி ஆவணசாலையில் (Records office) சேமமாக வைக்கப்பட்டிருக்கின்றன"

– 'கரவைவேலன் கோவை' முன்னுரையில்

சி.சதாசிவஐயர், 1935

www.tamilarangam.net

## இங்கெவர் வாழ...?

ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியில் புதைந்த
அப்பனின் சிதைமேல்

ஏழை மகனும்
ஏறி மிதித்து
இங்கெவர் வாழுவோ
தன்னுயிர் தருவான்

என்னே மனிதர்
இவரே இறந்தோர்க்கு
இங்கோர் கல்லறை
எடுத்திலர்! வெட்கம்

தன்னை மறைக்கத்
தானோ அவ்விறைவனும்
தளிர்பகம் புல்லால்
தரைமறைத்தனனோ!

- "தேயிலைத் தோட்டத்திலே"
ஸீ.வீ.வேலுப்பிள்ளை 1969

## ஒரு காட்சி

கடந்த 25 வருடங்களாக பார்த்த காட்சியைப் பார்த்துக்கொண்டு மௌனமாய் நடந்தேன். ஜகன் எனக்குப் பின்னால். வயல் பச்சை வெல்வெட்டுத் தண்ணீர் போல் உறைந்து நிலப்பரப்பை மூடியிருந்தது. காற்று வீசும்போது நெற்கதிர்கள் நெளிந்தன. வெள்ளைநாரைகள் சிறகடித்துப்பறந்து வயல்களில் இறங்கி மீன் வேட்டையாடின. பச்சையும் வெள்ளையும் ராபட் புருக் பாடிய "இருண்டகண்வாயில் வெண்பறவைகள்" என்ற அடிகள் ஞாபகம் வந்தது. புல்லில் பனிநீர் பாசிக்கோர்வை கட்டியிருந்தது. தவிட்டுப்புழுக்கள் கீ கீ என்று சப்தமிட்டுக்கொண்டு புழுக்களைத் தேடிக்கொண்டு அங்குமிங்குமாய் பறந்தன. பத்திபத்தியாய் தென்னைக் கூட்டம், அவைகளின் தோகைகளிலிருந்து பனிநீர் வடிந்துகொண்டிருந்தது.

- ஸீ.வீ.வேலுப்பிள்ளை,"இனிப்படமாட்டேன்" நாவலில் 1984

www.tamilarangam.net

## "என் 70 வயதுக்குட் கண்ட மாற்றங்கள்"

### - ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை -

"என் 70 ம் வயதான இந்த 1931 க்கிடையில் நான் முன் கண்ட இலட்சக்கணக்கான பெண்களையும் ஆண்களையும் காணமுடியவில்லை. அவர்கள் முக உருவங்களும் என் நினைவுக்குத் தூரித்துவிட்டன.

நான் கண்ட வீடு வாசல்களையும் காணவில்லை அந்த இடங்களிற் பல வெற்றிடமாயும், பல்வேறு விதமான வீடுள்ள காணிகளாயும், பல தோட்டங்களாயும் இருக்கக் காண்கிறேன்.

அந்த நாட்களின் ஒழுங்கை நெடுவழிகளுள் பல வேற்றுருவாய் மாறிவிட்டன.

ஆண் பெண் உடைகளும், நகைகளும், பேச்சுக்களும், செயல்களும், தேசவழக்கங்களும் மாறுதலாய் விட்டன.

குலாசாரம், மதாசாரங்களும் மாறுதல் அடைந்துவிட்டன.

அந்நாட்களில் கண்ட உண்ட உணவுகளும் அருவருக்கப்பட்டு மறைவாகிவிட்டன. தேகப்பியாச விளையாட்டுக்களும் கனவு போல் ஆகிவிட்டன.

பெற்றோர், ஆசிரியர், குருமார், முதியோர் முதலியோர்க்குப் பண்ணிவந்த மரியாதைகளும் மிக வித்தியாசமாகிவிட்டன.

விவாக முறைகளும் தன்னிட்ட நிலையில் மாறிவிட்டன.

செம்பு நாணயம், வெள்ளிநாணயம், கடுதாசிநாணயங்களும், முத்திரைகளும் பலதோற்றமாய் மாறிவிட்டன.

பள்ளிக்கூடங்கள், ஆலயங்களும், அவைகளில் நடைபெறும் கல்வி, வணக்கங்களும் வேற்றுருப் பெற்றுவிட்டன. ஓலையில் எழுதத் தெரிந்தவரைக் காணுவது அரிதாய் விட்டது.

அப்பு, ஆச்சி, அத்தான் ஆகிய சொல் வழக்குகளும் வேறாய் மாறிவிட்டன.

கோடு, கச்சேரி, பிரமாணங்களும் அதிக மாறுதல் அடைந்து விட்டன.

பிரதேச வியாபார கைத்தொழிற் பொருட்களில் நான் இதுவரை கண்ட மாற்றங்களுக்கோ அளவில்லை.

**அட்டைப்படம் : Bங்களாதேஷ் ஓவியன்.**

Debabrata Mukhopadhyay

www.tamilarangam.net

# தமிழ்ப் பிரதேசங்களும் சூழலும்



வ.ஐ.ச.ஜெயபாலன்

<u>அன்னிய ஆக்கிரமிப்பிலிருந்து கெரில்லா யுத்தம் வரை</u>

"இயற்கைவளங்கள் நம் முன்னோர்கள் நமக்கு அளித்த அருஞ்செல்வங்கள் அல்ல; நமது பிள்ளைகளிடமிருந்து நாம் கடனாகவே அவற்றைப் பெற்றுள்ளோம்"

www.tamilarangam.net



என்று அமெரிக்கப் பழங்குடிகளான செவ்விந்தியர்கள் கூறுவார்கள். நமது எதிர்காலச் சந்ததியிடமிருந்து கடனாகப் பெற்ற நமது மண்ணையும் சூழலையும் பேணிப் பாதுகாப்பதில் நாம் எவ்வளவு பொறுப்புடன் இருக்கவேண்டும்.

www.tamilarangam.net

இலங்கை, இந்திய பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளால் நமது சூழலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களும் சேதமானதும் நமது வரலாற்று சின்னமான யாழ்ப்பாணக் கோட்டை சிதைந்து கொண்டிருப்பதும் கவலை தருவனவாகும். இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் டச்சுநகர் பகுதியான சின்னக்கடைப் பகுதியிலும் சிதைந்த கோட்டையிலும் எஞ்சியுள்ள பகுதிகள் பாதுகாக்கப்படுவது நம் முன்னுள்ள அவசர அவசிய பிரச்சினைகளாகும். யாழ்ப்பாணக் கச்சேரியிலும் பல்வேறு பழம்பெரும் குடும்பத்தவர்களதும் தனியாரதும் வீடுகளிலும் கறையானுக்கும் பராமரிப்பின்மைக்கும் போருக்கும் தப்பி எஞ்சியிருக்கிற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பதிவேடுகளும் சுவடிகளும் பிற ஆவணங்களும் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும். இது இன்றைய போர்க்காலச் சூழலில் யாழ் பல்கலைக் கழகத்தினதும் கல்லூரிகளதும் ஆசிரிய மாணவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் வரலாறு தந்துள்ள மாபெரும் பொறுப்பாகும்.

தமிழ்ப் பிரதேசமான வட, கிழக்கு மாகாணத்தின் சுற்றுப் புறச்சூழலை பாதித்த காரணிகளுள் அன்னியராட்சி , பொறுப்பற்ற நமது நடவடிக்கைகள், சிங்கள, பௌத்த பேரினவாத அரசின் நடவடிக்கைகள், 1980 களில் வலுவடைந்த இனமோதல் என்பவை முக்கியமான காரணிகளாகும்.

## யாழ்ப்பாணம் எவ்வாறு கலாச்சாரப்பாலைவனமாகியது?

போர்த்துக்கேயர் ஆட்சி நமது மண்ணில் அதிக காலம் நீடித்திருக்கவில்லை. ஆங்கிலேயரின் பொருளாதார நடவடிக்கைகள் தேயிலை, றப்பர், தென்னை,காரீயம், கறுவா என தென்னிலங்கையிலேயே குவிந்திருந்தது. ஒப்பிட்டுரீதியில் டச்சுக்காரரே நமது பிரதேசத்தில் அதிக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாவர். வட,கிழக்கு மாகாணத்தின் டச்சு ஆட்சிக்காலமே அமைப்புரீதியாகவும் நமது கலாச்சாரத்தையும் இயற்கையையும் சுற்றுப்புறச் சூழலையும் வெகுவாகச் சீரழித்த காலமாகும்.

போத்துக்கேயர் காலத்திலேயே நமது கோவில்களும் முக்கியமான கலை கலாச்சார அமைப்புக்களின் பெரும்பகுதியும் நிர்மூலமாக்கப்பட்டது. டச்சுக்காரர்கள் நமது பண்டைய கலாச்சாரச் சின்னங்களிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பகுதிகளிலிருந்துதான் யாழ்கோட்டையையும் வேறு கட்டடங்களையும் கட்டியெழுப்பினார்கள். ஆராய்ச்சியாளர்கள் பழைய கட்டங்களதும் யாழ்ப்பாணக்கோட்டையினதும் சிதைவுகளுக்குள் நமது பண்டைய கலாச்சாரச் சின்னங்களின் சுவடுகளைத் தேடவேண்டும். நமது கலாச்சாரச் சின்னங்களைத் தேடி அழிக்கிற பணி போர்த்துக்கேயரைத் தொடர்ந்து டச்சுக்காரரது ஆட்சியின் ஆரம்ப காலங்களிலும் தொடர்ந்தது. வடகிழக்கு மாகாணப் பகுதியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிராமியக் கலைகளும் கலாச்சார நடவடிக்கைகளும் பெரும்பாலும் கோவில் திருவிழாக்கள், சமயப்பண்டிகைகள் ஆகியவற்றைச் சார்ந்ததாய் கோவிலை மையமாகக் கொண்டு செழித்திருந்தது. கோவில்கள் அழிக்கப்பட்டமையும் சமய வழிபாடு தடுக்கப்பட்டமையும் போர்த்துக்கேயரது ஆக்கிரமிப்பிலிருந்து ஆங்கிலேயரது ஆக்கிரமிப்பு வரையிலான ஒன்றரை நூற்றாண்டு காலப்பகுதியை சமுகரீதியாகவும் கலாச்சாரரீதியாகவும் இருண்டகாலமாகவே ஆக்கிவிட்டிருந்தது எனலாம். பின்னர் ஆங்கிலேயரினது ஆட்சியின்போது மதவழிபாட்டுச் சுதந்திரம் மீண்டபோதும் கிழக்குமாகாணத்தைப் போல யாழ்ப்பாணக் குடாநாட்டினால் தனது பாரம்பரிய கலை கலாச்சாரத்தை மீளமைக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தைப் போல கிழக்குமாகாணத்தில் சாதிமுறையானது ஒடுக்கும் அமைப்பாக இல்லாதிருந்தமையும் பிரிட்டிஷ் ஆட்சியின்போது கிழக்குமாகாணத்தில் நிலவிய நிலவுடைமை அமைப்பு சிதைந்து பெருமளவில் சிறுநிலவுடைமையாளர்கள் உருவானதும் வடமோடிக் கூத்துப்போல எஞ்சியிருந்த பாரம்பரிய கலைவடிவங்கள் மீளமைக்கப்படுவதனை இலகுவாக்கியது.

யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் பெற்ற உயர்சாதி நிலவுடைமையாளர்கள் கிராமியக் கலைகளை இழிசனர் வழக்காக ஒதுக்கி தென்னிந்திய உயர்கலைகளான கர்நாடக சங்கீதம், நாதஸ்வரம், தவில், பரதநாட்டியம் என்பனவற்றைப் பேணினர். நமது கலாச்சாரம் வேரோடியிருந்த கிராமியக் கோவில் வழிபாட்டு மரபையும் சிதைத்து கோவில்களையும் தெய்வவழிபாட்டையும் பிராமணர் தலைமையில் ஆகமவழிப்படுத்தினர். இவ்வாறுதான் யாழ்ப்பாணம் கலாச்சாரப் பாலைவனமாயிற்று.

பாலைத்தீவாகிய ஒரு நெடுந்தீவின் கதை!

பிரிட்டிஷ் ஆட்சியின்போது தென்னிலங்கையின் கரையோரங்களும் மலைப்பிரதேசங்களும் சீர்குலைக்கப்பட்ட போதும் வடகிழக்கு மாகாணங்களின் இயற்கைச் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவானதாகும்.

முத்துச் சலாபம் இருந்த மன்னார் மாவட்டப் பகுதிகள், குதிரை வளர்ப்புக்கு தெரிவு செய்யப்பட்ட நெடுந்தீவு, பெருமளவு மரஏற்றுமதி இடம்பெற்ற கிழக்கு மாகாணக் கரைகள் என்பனவற்றை டச்சுக்காரர் காலத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவற்றுள் நெடுந்தீவு மிகவும் மோசமான சுற்றுச்சூழல் சீர்குலைவுக்கு உட்படுத்தப்பட்ட பிராந்தியமாகும். பருத்தி நூலுக்கும் பால்பண்ணைப் பொருட்களுக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் இராமேஸ்வரப் பகுதிகளிலும் பிரபல்யம் பெற்றிருந்த நெடுந்தீவு போர்த்துக்கேயரின் குறுகிய ஆட்சிக்காலத்திலும் பின்னர்

டச்சுக்காலத்திலும் காலனித்துவ ஆட்சியாளர்களது குதிரைப்பண்ணையாகவும் சாயவேர் (indigo) சேகரிக்கும் தரிசு நிலமாகவும் சீர்குலைக்கப்பட்டது. கடலால் நாலுபுறமும் வேலியிடப்பட்டதும் தலைநிலத்திலிருந்து எட்ட இருப்பதுவும் வளமான மேய்ச்சல் நிலங்களைக் கொண்டதுமான நெடுந்தீவை இராணுவரீதியாக முக்கியத்துவம் பெற்றிருந்த குதிரைவளர்ப்பிற்கு அன்னியர்கள் தெரிவுசெய்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

முதாதையர்களது செவிவழிக்கதைகளிலிருந்தும் ஆங்கிலமொழிபெயர்ப்பில் கிடைக்கிற டச்சு ஆவணங்களிலிருந்தும் குதிரைவளர்ப்பிற்காகவும் மேய்ச்சல் நிலத்தை விரிவாக்குவதற்குமாக பல மைல் தூரம் நீண்டிருந்த பருத்தித்தோட்டங்கள் எரியூட்டப்பட்டமையும் தெரியவருகின்றது.

வேறு ஒரு டச்சுஆவணம் தடையை மீறி மக்கள் மீண்டும் பருத்திச்செய்கையில் ஈடுபடுவதையும் இத்தகைய பருத்தி நிலங்களை எரியூட்டும்படி நெடுந்தீவில் பணியாற்றிய டச்சு அதிகாரிக்கு உத்தரவு அனுப்பப்பட்டமையையும் குறிப்பிடுகிறது.

குதிரைகளுக்காக புல்வெளிகளை விரிவாக்குவது, சாயவேர் சேகரிப்புக்கான பகுதிகளை விரிவாக்குவது, நிலவும் சமூக பொருளாதார அமைப்பை சீர்குலைத்து குதிரைவளர்ப்பு, சாயவேர் சேகரிப்புக்கு தேவையான கூலியாட்களை உருவாக்குவது, பருத்திநூல் ஆடைகளில் தமக்கிருந்த ஏகபோகத்தை பாதுகாப்பது என டச்சுக்காரரின் பருத்திச்செய்கை நிலங்களை கைப்பற்றி அழிக்கும் நடவடிக்கைகள் பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாகும்.

நெடுந்தீவின் பண்டைய சமூகத்தினர் தீவு முழுவதிலும் பள்ளநிலங்களில் மழைநீரைத் தேக்கிவைப்பதன் மூலம் நிலத்தடி நீர்மட்டத்தையும் நிலத்தடி நீரின் நன்னீர்த் தன்மையையும் (கடல் நீர் உட்புகுந்து நிலத்தடிநீரை உவர்ப்பாக்குவதிலிருந்து பாதுகாக்கவும்) பராமரித்தனர். எனினும் டச்சுக்காரர் மாரிகாலத்தில் மேய்ச்சல் நிலங்கள் மூடப்படுவதைத் தடுப்பதற்கும் தரிசுநிலங்களில் வளர்ந்த சாய அவுரிச்செடிகளைப் பாதுகாக்கவுமாக கால்வாய்கள் வெட்டி நீர்த்தேக்கங்களை கடலுக்குள் வடியவிட்டனர். இதைவிட 'வெட்டுக்கழி' என்கிற கடல்நீர்த்தேக்கம் ஒன்றையும் வெட்டினர்.

டச்சுக்காரர்கள் ஈக்களின் தொல்லையிலிருந்து பாதுகாப்பதற்காக குதிரைகளைக் குளிப்பாட்டினார்களென்றும் டச்சுக்காரர் இந்த உவர் நீர்த்தேக்கத்தில் தோல் படகுகள் ஓட்டி களித்தார்களென்றும் மாரிகாலங்களில் பொம்மைத் தாராக்களை மிதக்கவிட்டு சைபீரியத் தாராக்களை இத்தேக்கத்தில் இறங்கவைத்து வேட்டையாடினார்களென்றும் குறிப்பிடும் செவிவழிக் கதைகளை கேள்விப்பட்டுள்ளேன்.

இந்த செயற்கைக் கழியை ஒரு சிறு கால்வாய் கடலுடன் இணைத்தது.

www.tamilarangam.net

மாரிகாலங்களில் தரையில் தேங்கும் நீரினை வேகமாக கடலுக்குள் பாய்ச்சுகிற ஒரு அமைப்பாக பயன்பட்ட கால்வாய்கள் கடல் பெருக்கின்போது கடல்நீர் நாட்டுக்குள் புக வழிவகுக்கும் அமைப்பாகவும் செயற்பட்டது. இத்தகைய மோசமான நடவடிக்கைகளால் பவளப்பார் தீவான நெடுந்தீவின் மெல்லிய வளமிக்க மேல்மண்படை அரிப்புண்டு போக நேர்ந்தது.

கட்டற்ற குதிரை மேய்ச்சலும் தொடர்ச்சியான சாயவேர் சேகரிப்பும் பண்டைய நீர்நிலையியல் (Hydraulic) அமைப்பு சீர்குலைக்கப்பட்டமையும் கடல் நீர் உள்ளே புகவிடப்பட்டமையும் ஒன்றரை நூற்றாண்டு டச்சு ஆட்சிக் காலத்திற்குள் பருத்தித்தீவு, பால்தீவு என சிறப்புப் பெயர் பெற்றிருந்த நெடுந்தீவை அரைப்பாலைவனத் தீவாக மாற்றிவிட்டது.

இலங்கையிலும் ஆசியாவிலும் டச்சு சாம்ராச்சியத்தை கட்டிக்காக்க நெடுந்தீவில் வளர்க்கப்பட்ட குதிரைகள் உதவின. இன்றைய ஒல்லாந்தின் அபிவிருத்தியில்- அம்ஸ்ரடாம் தெருக்களிலெல்லாம் டச்சுக்காரர்களால் அரைப்பாலைவனமாக்கப்பட்ட நெடுந்தீவுமக்களின் கண்ணீர்வாடை அடிக்கிறது. அபிவிருத்தியும் பொருளாதார மேம்பாடும் கொண்டு திகழும் ஒல்லாந்து மக்களுக்கு நெடுந்தீவின் சூழல் புனருத்தாரணத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவிடும் தார்மீகப்பொறுப்பு உள்ளது. காலனித்துவ ஆட்சியில் நமது மண்ணிற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இது ஒரு உதாரணமாகும்.

## நடுத்தரவர்க்கமும் சூழல் அழிவும்

பிரிட்டிஷாரின் ஆக்கிரமிப்பு தொடங்கிய காலப்பகுதியில் தென்னிலங்கையின் தென்மேற்குக் கரையோரம் போர்த்துக்கேயர் குறிப்பாக டச்சுக்காரரின் கறுவா சேகரிப்பு நடவடிக்கைகளால் ஓரளவு பாதிப்புற்றிருந்தது. தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் ஆங்கிலேயரின் கோப்பி, தேயிலை, றப்பர் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள், மற்றும் பிரிட்டிஷ் காலத்தில் முதன்மைப்பட்ட தென்னைச் செய்கை போன்றவற்றால் தென்னிலங்கையின் சுற்றுப்புறச் சூழலில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது. பிரிட்டிஷ் காலத்தில் வடகிழக்கு மாகாணங்களின் இயற்கைச் சூழலுக்கு ஏற்பட்ட தாக்கம் ஒப்பீட்டு அளவில் குறைவு என்பதை முன்னர் குறிப்பிட்டோம்.

யாழ்குடாநாட்டில் மரவள்ளிக்கிழங்கு போன்ற புதிய பயிரினங்கள் புகுத்தப்பட்டதுடன் பிரிட்டிஷ் வருகைக்கு முன்னரே புகுத்தப்பட்டிருந்த புகையிலை போன்ற பணப்பயிர்கள் ஏற்றுமதி வர்த்தக அடிப்படையில் செய்கை பண்ணப்படுவது அதிகரித்தது. படிப்படியே கல்வி வளர்ச்சியும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற கிழக்காசிய நாடுகளுக்கான பொருளாதாரப் புலப்பெயர்வுகளும் அதிகரித்தன. யாழ்ப்பாணத்

www.tamilarangam.net

தமிழருக்கு தென்னிலங்கையில் பல்வேறு அரசு, தனியார்துறை உத்தியோக வாய்ப்புகளும் முதலீடுகளும் அதிகரித்தன. இப்படி வெளிவாரியாகத் தேடப்பட்ட செல்வம் யாழ்குடா நாட்டினுள் புகுந்தமை இயல்புக்குமாறான அளவில் நடுத்தரவர்க்கத்தை விரிவடையச் செய்தது. தொடர்ச்சியாக இடம் பெற்ற நடுத்தர வர்க்க வளர்ச்சியும் நகராக்கமும் வேறொரு விதத்தில் யாழ்குடாநாட்டின் வாழ்வையும் சுற்றுச்சூழலையும் பாதித்தது.

1880 களிலிருந்து 1980 வரையிலான ஒரு நூற்றாண்டு காலகட்டத்தில் நிலத்தின் விலையும் தொடர்ச்சியாக அதிகரித்து வந்தது. தோட்ட நிலங்களையும் ஏனைய மேட்டு நிலங்களையும் கல்வீடுகளும் வளவுகளும் கட்டடங்களும் ஆக்கிரமித்தன. இதனால் பல இடங்களில் மரபு சார்ந்த நீர்ப்பராமரிப்பில் முக்கியம் பெற்றிருந்த சிறு நீர்த்தேக்கங்கள் தூர்க்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் மேம்பாடடையாத நிலமற்றவர்கள் குறிப்பாக சாதிவாரியாக ஒடுக்கப்பட்டிருந்தவர்களின் வாழ்நிலைமையும் சூழலும் மேலும் பாதிக்கப்பட்டது. கடந்த ஒரு நூற்றாண்டு கால வரலாற்றில் யாழ்குடாநாட்டினுள் பெருமளவில் வெளியிலிருந்து பணப்பாய்ச்சல் ஏற்பட்ட காலகட்டங்களில் எல்லாம் சாதிவாரியாக ஒடுக்கப்பட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

1844 டிசம்பர் 20 ல் யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிவாரி விவசாய அடிமைமுறையை பிரிட்டிஷார் சட்டரீதியாக ஒழித்த போதும் சமூக பொருளாதார ரீதியாக அடிமைகளாக சீரழிந்திருந்த மக்களை விடுவிக்கும் பணி எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. புதிய நிலைமைகளிலும் பாரம்பரிய ஒடுக்குதல்கள் தொடர்ந்த போதும் பாரம்பரியமாக அடிமைகளுக்கு இருந்த பாதுகாப்பும் அவர்கள் தொடர்பாக அடிமைச் சொந்தக்காரருக்கு இருந்த பொறுப்புகளும் இல்லாது போயிற்று.

சாதிவாரியாக ஒடுக்கப்பட்டவர்கள் குறிப்பாக முன்னைய அடிமைப்பிரிவினர் குடியிருந்த நிலங்களின் சந்தை வாய்ப்புகள் விரிவடைந்ததால் தொடர்ச்சியாக இம்மக்கள் குடியிருப்பு நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு குடியிருப்புக்கு பொருத்தமில்லாத கற்பூமிகளிலும் குண்டு குழிகளிலும் வாழுமாறு ஒதுக்கப்பட்டனர். 1970 களில் ஏற்பட்ட மிளகாய், வெங்காய சந்தை எழுச்சி பெருமளவில் பணத்தை குடாநாட்டினுள் கொண்டுவந்த போதும் ஒடுக்கப்பட்ட சாதியினருள் முன்னைய அடிமைப்பிரிவினரின் வம்சாவளியினர் பாதிக்கப்பட்டனர். குடியிருப்பு நிலம், கல்வி, தொழில்வாய்ப்பு என்பவை உறுதிப்படுத்தப்படுகிற வரைக்கும் இந்தப் பிரிவினரது கண்ணீரை எந்தவிடுதலைப் போராட்டமும் துடைத்துவிடப் போவதில்லை.

யாழ்ப்பாணக்குடா நாட்டின் மத்தியதர எழுச்சியாலும் நகர்மயமாக்கத்தாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப் பட்ட இன்னொரு பகுதி வன்னிப்பிரதேசமாகும். யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அதீத நுகர்ச்சி, கட்டடவளர்ச்சி என்பவை வன்னிப்புறக் காடுகளுக்கு யமனாக வந்து வாய்த்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக 1850 களில் சேர். ஹென்றி வாட் ஆளுநராக இருந்த காலத்தில் கிழக்குமாகாணத்தில் பணியாற்றிய தாராளவாதிகளான பிரிட்டிஷ் அதிகாரிகள் சிலர் சேனைச் செய்கையை தடைசெய்வதிலும் நிலவுடைமையாளர்களது ஆதிக்கத்தை உடைப்பதிலும் ஓரளவு வெற்றிபெற்றனர். கிழக்கு மாகாணத்திலும் உலர்வலய சிங்களப் பகுதிகளிலும் சுற்றுப் புறச்சூழலுக்கு பெரும் சவாலாக இருந்த சேனைச் செய்கைமுறை இக்காலகட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் வெற்றிகரமாக தடைசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

சேனைச்செய்கைக்கு அனுமதி பெறுவதற்கு உள்ளூர் குளங்களை புனர் அமைக்கும் பணிகளில் ஈடுபட வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் சிறிய உள்ளூர் குளங்கள் மட்டுமன்றி இறக்காமம், றுக்கம் போன்ற பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் புனரமைக்கப்பட்டன.

மட்டக்களப்பு வாவியின் மேற்குக்கரையிலும் தற்போதய அம்பாறை மாவட்டப் பகுதிகளிலும் புனரமைக்கப்பட்ட குளங்களின் கீழ் நிலம் விற்பனைக்கு வந்தது. நிலமற்ற ஏழைகளுக்கு லைசன்ஸ் அடிப்படையில் பள்ளப்பாங்கான மானாவாரி நிலங்களை திருத்தி பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. மறுபுறத்தில் சேனைச்செய்கை படிப்படியாக தடைசெய்யப்பட்டது. போடி நிலக்கிழார்களின் வாரக்குடிகளும் நிலம் பெற்றதால் போடி நிலக்கிழார் அமைப்பின் இறுக்கமும் இக்காலகட்டத்தில் தகர்ந்தது. கிழக்கு மாகாணத்தின் எல்லைப் புறங்களில் இருந்த சிறுசிறு சிங்களக்கிராமங்களையும் ஏனைய உலர் வலய சிங்களப் பிரதேசங்களையும் சேனைச்செய்கை ஒழிப்பு பெரிதும் பாதிக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் சம காலகட்டத்தில் இடம் பெற்ற அடிமை ஒழிப்பு நடவடிக்கைகள் வெறுமனவே சட்டரீதியாக மட்டும் அமைய கிழக்கு மாகாணத்திலோ போடி நிலவுடைமையாளர்களின் கிடுக்குப் பிடிக்குள் வாரக்குடிகளாக அல்லல் பட்ட மக்கள் சிறுநிலவுடைமையாளர்களாக மாறும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது. கிழக்கு மாகாண நிலவுடைமை சாதிவாரியாக அமையாமையும் யாழ்ப்பாணத்து நிலவுடைமையாளர்களைப் போல கிழக்கு மாகாண நிலவுடைமையாளர்கள் சமூகரீதியாக கொழும்பில் செல்வாக்குள்ளவர்களாக அமைந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சேனைச்செய்கை ஒழிப்புக்காலகட்டத்தில் கிழக்குமாகாணத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் தொடர்பாக தாராளவாதியான பிரிட்டிஷ் அரசாங்க அதிபர் ஒருவர் 1850 களில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"போடியாரின் நிலத்தில் வருடாவருடம் பணிபுரிந்த விவசாயிகள் பாதுகாப்பற்ற வாழ்க்கை நடத்தினர். தாங்கள் பிறந்த-மீட்சிக்கு வழியற்ற வறுமை நிலையிலிருந்து மேம்படுவது இயலாததாக இருந்தது....இன்று அனுமதிப்பத்திர நிலத்தில் பயிர்செய்பவர்களுள் பெரும் பகுதியினர் முன்னர் சீரழிவுமிக்க சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களாவர். சேனைப்பயிர்ச்செய்கை இம்மாவட்டத்தின் ஆயிரக்கணக்கான ஏக்கர் காட்டு நிலங்களை நாசமாக்கியுள்ளது....."

## குடியேற்றங்களும் சூழலும் இனமோதலும்

சுதந்திரத்தின் பின்னர் வடகிழக்கு மாகாண சூழலிலும் நிலப்பயன்பாட்டிலும் குடியேற்றத் திட்டங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. பொதுவாகவே மேற்படி குடியேற்றத் திட்டங்கள் உலர்வலையத்தில் நீர்ப்பாசன அமைப்புகளுக்கும் நெற்செய்கைக்கும் உகந்த காட்டு நிலங்களை கண்டுபிடிப்பதும் அவற்றுக்கு ஈரவலயத்து உபரிக்குடிசனத்தை அப்புறப்படுத்துவதும் என்ற அடிப்படையிலேயே அமைந்தது. வடகிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் வேறொரு மேலதிகப் பிரச்சினையும் இருந்தது. தமிழ் மக்களது பாரம்பரிய பிரதேசத்தை அபகரிப்பதற்கும் வடக்கு கிழக்கு மாகாணம் சார்ந்து நிலவிய தமிழ்பேசும் மக்களது தொடர்ச்சியை உடைப்பதற்கும் D.S சேனநாயக்கா குடியேற்றத் திட்டத்தை வலியதொரு ஆயுதமாக பயன்படுத்தினார். வகுப்புவாதம் குடியேற்றத் திட்ட திட்டமிடலில் ஏற்கனவே நிலவிய சுற்றாடல் சூழல் பற்றிய பொறுப்பின்மையை மேலும் அதிகரிக்கச் செய்தது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராக எல்லைப் பிரதேசங்களை பாதுகாப்போம் என்ற கோஷங்களோடு தமிழரசுக் கட்சியினரும் சுந்தரலிங்கம் போன்ற உதிரித் தமிழ் அரசியல் தலைவர்களும் தமிழ் தேசியத்தன்மை உள்ள அரசஅதிகாரிகளும் முன்னின்று நடைமுறைப் படுத்திய தமிழ் குடியேற்றத் திட்டங்களும் சூழல் மாசடைதல் பற்றிய பிரக்ஞை இல்லாததாகவே அமைந்தது.

எல்லைப் பகுதிகளை காப்பாற்றும் தமிழ் தேசியவாத இயக்கத்தின் வெற்றியால் வடமாகாணம் பெருமளவு பாதுகாக்கப்பட்டது. காடுகளை நோக்கி நகரத் தயாராக இருந்த நிலமற்ற விவசாயிகள் பெருமளவு இல்லாதிருந்த கிழக்கு மாகாணத்தில் இந்த இயக்கம் குறிப்பிடத்தக்க வெற்றிபெறவில்லை. கிழக்கு மாகாணத்தில் தமிழ்தேசிய இயக்கம் முஸ்லிம்களை பெருமளவில் வென்றெடுக்கத் தவறியமையையும் D.S சேனநாயக்கா இனம் கண்டுகொண்டார். நிலைமைகளை சாமர்த்தியமாகக் கையாண்ட அவர் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதில் பெரும் வெற்றிபெற்றார். இலங்கைத் தீவில் 1930-1970 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் போல ஏககாலத்தில் சமூக பொருளாதார இன அரசியல் பிரச்சினைகளையும் சூழல் மாசடையும்

www.tamilarangam.net

பிரச்சினைகளையும் ஒன்றுசேர ஏற்படுத்திய குடியேற்றத் திட்டங்கள் வேறில்லை எனலாம்.

இந்த அரசு ஆதரவுச் சிங்கள குடியேற்றத் திட்டங்களும் அதற்கு அனுசரணையாக அமைந்த நிர்வாக அமைப்பும் இன உறவுகளை மேலும் மோசமாக்கின. பழைய மட்டக்களப்பு மாவட்டம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களாகத் துண்டாடப்பட்ட விதமும் பின்னர் முஸ்லிம் மக்கள் பெரும் பகுதியாக வாழும் கரையோரங்களிலிருந்து பரந்த காடுகளையும் பாரிய சிங்களக் குடியேற்றங்களையும் கொண்ட பின்புலப் பகுதிகள் சிங்கள உதவிஅரசாங்க அதிபர்கள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட விதமும் அபிவிருத்திக்குத் தேவையான பின்புலங்களைத் துண்டாடிக் கொண்டு தமிழரையும் முஸ்லிம்களையும் கரையோரங்களுடன் ஒதுக்கிவிட்டதாகவே அமைந்தது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களினது மந்தைகளுக்கான மேய்ச்சல் நிலங்களும், அவர்களது நீர்ப்பாசனக் குளங்களுக்கு நீர்வடியும் பிரதேசங்களும், அவர்களது வாழ்வுக்கும் எதிர்கால அபிவிருத்திக்கும் அடிப்படையான காடுகளும் அம்பாறை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்களை அடியொற்றி உருவாக்கப்பட்ட சிங்கள உதவிஅரசாங்கப் பிரிவின் எல்லைக்குள் விழுங்கப்பட்டுவிட்டன. காபன் பிரதி போல இதையொத்த நிலமைமையை திரிகோணமலை மாவட்டத்திலும் காணலாம்.

சிங்கள நிர்வாக ஆதிபத்தியத்துக்குள் விழுங்கப்பட்ட நிலங்கள் போக எஞ்சியிருந்த நிலநீர் வளங்களுக்கும் மேய்ச்சல் நிலங்களுக்குமான தமிழ் முஸ்லிம் மக்களது ஜீவமரணப் போராட்டமே இன்றைய தமிழ் முஸ்லிம் மக்களின் மோதல்களின் அடிப்படையாகும்.

மேற்படி நிலைமைகள் இலங்கையியேயே மிகமோசமான தமிழ்-சிங்கள-முஸ்லிம் வகுப்புவாதம் ஆழமாக அமைப்பு ரீதியாக ஸ்தாபிக்கப்பட்டு வளர்ந்துவரும் பகுதியாக கிழக்கு மாகாணத்தை மாற்றியுள்ளது.

1970 களில் ஏற்பட்ட உபஉணவுப் பொருட்களின் விலைஎழுச்சிக் காலகட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட பஞ்சம், தோட்டநிலங்களில் இடம்பெற்ற ஆக்கிரமிப்பு என்பவற்றால் வெளியேறி வடகிழக்கு மாகாணத்துக்கு பஞ்சை பராரிகளாக புலம்பெயர்ந்த மலையகத் தமிழர்களது கூலிகுறைந்த உழைப்பை பெருமளவில் சுரண்டி அவர்களது பெரும் உழைப்பிற்கு ஊடாக வடகிழக்கு நீர் வளமிருந்த காட்டுநிலங்கள், காட்டாற்றங்கரைகள் என்பன தோட்டநிலங்களாக மாற்றப்பட்டன. விவசாய இரசாயனங்களதும் பூச்சிகொல்லிகளதும் உபயோகம் பலமடங்கு அதிகரித்தது.

www.tamilarangam.net

அதிகரித்த பூச்சிகொல்லிப் பிரயோகம் அருகிவரும் பல்வேறு உயிரினங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் கொன்றொழித்தது. புதிய பணமும் அதனால் வீடுகட்டுதல், தளபாடங்கள் கொள்முதல் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு காட்டுமரங்களுக்கும் ஏனைய வளங்களுக்குமான கேள்வியை பலமடங்கு அதிகரிக்கச் செய்தது. இக்காலகட்டம் 1977 களில் திறந்த பொருளாதாரக் கொள்கை அமுலாகும்வரை நீடித்தது. பின்னர் மேற்படி காடழிந்த நிலங்கள் தரிசுகளாகக் கைவிடப்பட நேர்ந்தது. உபஉணவுப் பொருள் விலை எழுச்சிக் காலகட்டத்தில் நிலமற்ற அல்லது அரைக்கூலி விவசாயிகளாக இருந்த பல குடும்பங்கள் மேம்பட்டனர். கிராமியமட்ட அபிவிருத்தி தொடர்பாக பலசாதகமான வளர்ச்சிகள் ஏற்பட்டது. இருப்பினும் சூழல், வளங்கள் தொடர்பான பிரக்ஞையும் முறையான சட்டதிட்டங்களும் கண்காணிப்பும் இன்மையால் ஏற்பட்ட சூழல் பிரச்சினை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு நூற்றாண்டு கால வடகிழக்கு மாகாணத்தின் சமூக பொருளாதார வரலாற்றிலேயே சூழலையும் மக்களையும் இன்று இடம்பெறும் இனமோதல்களைப் போல வேறு எந்தவொரு பிரச்சினையும் பாதிக்கவில்லை. எனினும் வளங்களுக்கும் ஆட்சி அதிகாரத்துக்குமான தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களது போட்டிக்கும் மோதல்களுக்கும் அதன் வழி வெடித்த இன்றைய யுத்தத்துக்கும் ஏற்கனவே குறிப்பிட்ட சூழல் சீர்குலைவுகளும் முக்கியமான ஒரு காரணமாகும்.

## கிழக்கு மண்ணில்

கிழக்கு மாகாணத்துக்கு நேர்ந்திருக்கின்ற ஒரு துர்ரதிஷ்டம் அது இந்து சமுத்திரத்தில் உருவாகும் புயல்கள் தாக்கும் பிரதேசத்துக்கு முகம் கொடுக்கும் வகையில் அமைந்திருப்பதாகும். ஏற்கனவே பாலைவனமாகிற ஆபத்தை எதிர்நோக்கியுள்ள இம்மாவட்டத்தின் பலபகுதிகள் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் அதிக கரிசனைக்கு உரியதாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டுப்பரம்பல் 16.1 % மாக உள்ளது. வடகிழக்கு மாகாணங்களைப் பொறுத்து யாழ்மாவட்டத்தின் வெளியே மிகக்குறைவான காட்டுப்பரம்பலைக் காட்டிநிற்கும் பகுதி இதுவேயாகும். மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறப்பு இங்கு காணப்படும் சிற்றாறுகள், கடல், மண்கரைகள், கடல்ஏரிகளிலும் கழிகளிலும் இன்னமும் நிறைந்திருக்கும் உவர் நீர்த்தாவர காடுகள் என்பன விரவிய கரையோர அமைப்புமாகும். நிலம், நீர் பயன்பாடு தொடர்பான அரசின் வகுப்புவாத அணுகுமுறை, பரவலான கிராமிய வறுமை, நிலம் செறிந்த (Land extensive) விவசாயப் பாரம்பரியம், கட்டற்ற மந்தைமேய்ச்சல், புயல்கள், அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்குகளும் வரட்சியும் என்பவை ஒருபுறமும், தொடர்ச்சியான யுத்தம், கெரில்லா, அரசின் கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகள், தொடர்ச்சியான அகதிகளின் புலப்பெயர்வுகள் என்பவை மறுபுறமாக மட்டக்களப்பின் எஞ்சியுள்ள இயற்கைச்சூழலின் மீது-எஞ்சியுள்ள காடுகள், வளமான கடலேரிகள் மீது பாரிய


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழுத்தத்தை தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகிறது. யுத்தம் கிழக்கு மாகாணத்தின் இயற்கைச் சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் பாரியதாயினும் எதிர்மறையான ஒரு நன்மையும் ஏற்பட்டுள்ளது. குடியேற்றத் திட்டங்கள் தடைப்பட்டதும் தாமதப்பட்டதும் தான் அந்த நன்மையாகும்.

கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள் தடுக்கப்படுவது மட்டுமல்ல சகல எதிர்காலக்குடியேற்றத் திட்டங்களும் சூழலில் அவை ஏற்படுத்தக் கூடிய பாதிப்புக்களின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படவேண்டும். குடியேற்றத் திட்ட அடிப்படைக்குப் பதிலாக நீர்ப்பாசன வசதிகளை உறுதிப்படுத்துதல், சந்தைவாய்ப்புக்களை உருவாக்குதலும், பாதுகாத்தலும் ஏக்கருக்கான விளைச்சலைப் பெருக்குதல்" பொருத்தமான காணி மீள் பங்கீடுகளையும் நிலச்சீர்திருத்தத்தையும் மேற்கொள்ளுதல்" கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்தல்" மாற்று வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் என்ற அடிப்படையில் கிழக்கு மாகாணம் அபிவிருத்தி செய்யப்படுவது அவசியமாகும்.

சமாதானம் ஏற்பட்டதும் புதிய சிங்கள தமிழ் முஸ்லிம் குடியேற்றத் திட்டங்களை காலவரையறையின்றி பின்போட்டு மீள்பரிசீலனை செய்வதுடன் அபிவிருத்திக்கான மாற்று வழிமுறைகளை கடைப்பிடிப்பதில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். சர்வதேச உதவிநிறுவனங்களும் கிழக்கு மாகாணத்தில் சூழல் பற்றிய கரிசனையோடு போதிய ஆய்வுகள் இல்லாமல் குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு உதவி வழங்குதல் கூடாது. யுத்தத்தினால் ஏற்பட்ட எதிர்மறை அதிர்ஷ்டங்களில் ஒன்றாக தடைப்பட்ட மதுறுஒயா குடியேற்றத் திட்டத்தை குறிப்பிடவேண்டும். இத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மட்டுமன்றி பொலனறுவை மாவட்டத்துக்கும் சூழல் சம்பந்தப்பட்ட பேரழிவைத் தரக்கூடியதாகும். மட்டக்களப்பின் வடபகுதியில் எஞ்சியுள்ள 423 சதுர கி.மீ காட்டுப் பகுதிகளுக்கும் இத்திட்டம் பாரிய சேதத்தை கொண்டுவரும். நீண்டகால அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டம் பாலைவனம் ஆவதற்கே இது வழிவகுக்கும். மதுறுஒயாக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் 70000 ஏக்கர் நிலம் பொலநறுவையிலும் 55000 ஏக்கர் நிலம் மட்டக்களப்பின் காடு செறிந்த வடபகுதியிலும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படும். இப்பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மட்டுமல்ல தமிழ் முஸ்லிம் குடியேற்றங்கள் கூட அனுமதிக்கப்படக்கூடாது. மதுறுஒயாத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டம் பெறவேண்டிய நீர் மேலதிகமாகக் காடுகளையும், விறகு காடுகளையும் வளர்ப்பதற்கும் வாவியின் மேற்குக்கரையில் கோரளை, ஏறாவூர், மண்முனை, கோரதீவு பற்றுக்களில் ஏற்கனவே நடைபெறும் விவசாயத்துக்கு பயன்படும் வகையிலும் பகிரப்படவேண்டும். மட்டக்களப்பின் உதாரணங்கள் கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் விஸ்தரிக்கப்பட வேண்டியவையாகும்.

வடக்கு மாகாணத்தின் குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்று காட்டுப்பரம்பல் குறைவாகவும் சனத்தொகை அடர்த்தி அதிகமாகவுமுள்ள பகுதிகளில்

www.tamilarangam.net

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை அதிகரித்துவரும் எரிபொருள் விறகு தேவையாகும். மட்டக்களப்பை பொறுத்து 1978 ன் புயல் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான விறகின் ஆதாரமாக விளங்கிய தென்னந்தோட்டங்களையும் வீட்டுத் தோட்டங்களையும் சிதைத்து அழித்தது. இது காட்டின் மீதும் கடலேரித் தாவரங்கள் மீதுமான ஆழத்தை பலமடங்கு அதிகரித்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமன்றி வடகிழக்கு மாகாணம் முழுவதுமே இயற்கைச் சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில் எரிபொருள் தேவையை பூர்த்திசெய்யும் வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். வடகிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி மூல உபாயத்தின் முக்கிய அம்சமாக இயற்கைச் சூழலை மாசு படுத்தாமல் எரிபொருள் பிரச்சினைக்கான ஒரு தீர்வு காண்பது அவசியமாகிறது.

மாற்று எரிபொருள் விறகு உற்பத்தி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு சூழலுக்கு வளம் சேர்ப்பதாக அமைதல் வேண்டும். காட்டுப்பரம்பல் அற்ற யாழ்ப்பாணக் குடாநாட்டில் பனந்தோப்புகளும் வீட்டுத் தோட்டங்களும் இந்தவகையில் குறிப்பிடத்தக்க பங்காற்றுகின்றன. ஏனைய பகுதிகளில் குறிப்பாக கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணம் அனைத்திலும் திட்டமிட்ட பனை அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குவது அவசியமாகும். புயலுக்கும் வரட்சிக்கும் தாக்குப்பிடிக்கும் பனையின் தன்மையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்தவகையில் பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் அனுபவங்களும் முக்கியமானவையாகும். விறகுக் காடுகளைப் பொறுத்தவரையில் ஒத்தகாலநிலை, புவியியல் சூழலைக் கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரை மாவட்டங்களில் இடம்பெறும் பாரிய அளவிலான விறகுக் காடுவளர்ப்பின் அனுபவங்கள் பெறப்படவேண்டும்.

வடகிழக்கு மாகாணத்தின் மற்றுமொரு முக்கிய செல்வம் கடலேரிகளும் கழிகளுமாகும். இவற்றை முக்கியமான வளங்களாக அடையாளப்படுத்துவதற்குப் பதிலாக இவற்றை நன்னீராக்குதல் என்ற பிழையான கானல் நீரின் பின்னால் செல்கின்ற போக்கில் சிலர் சிந்திப்பது கவலைக்குரியதாகும். இது கைவிடப்பட வேண்டிய சிந்தனையாகும். கடல் ஏரிகளிலும் கழிகளிலும் சிற்றாறுகளின் முகத்துவாரங்களிலும் காணப்படும் உவர் நீர் தாவரங்களை பேணுவதுடன் மீள்நடுகையும் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். சிற்றாறுகளின் கரைகளின் இயற்கைத் தாவரங்கள், நாணல் என்பவையும் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் உரியவையாகும்.

## கெரில்லா யுத்தத்தால்.....

வடகிழக்கு மாகாணத்தின் இயற்கைச் சூழலுக்கு 50,60 களில் முதன்மை பெற்றிருந்த திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட மாபெரும் அனர்த்தம் 1980 களிலிருந்து தொடர்கின்ற யுத்தமாகும். கெரில்லா நடவடிக்கைகளும் அரசின் கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகளும் இன்னமும் யாழ்குடா நாட்டின் வெளியே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயற்கைச் சூழல் வளமுடன் இருக்கும் பின்தங்கிய பிரதேசத்துக் காடுகளிலும் கடற்கரைகளிலும் மையப்பட்டிருப்பது முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

யாழ்குடா நாட்டைப் பொறுத்து பயிர்ச்செய்கையும் வரட்சிக் காலங்களில் இறைப்பு நீரில் தங்கியிருந்த வீட்டுத்தோட்டங்களும் பெருமளவில் பாதிக்கப் பட்டுள்ளது. மின்சாரம், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் விறகுத்தேவை அதிகரித்த சூழலின் பின்னணியில் இப்பிரச்சினை புரிந்துகொள்ளப் படவேண்டும்.

கண்மூடித்தனமான எறிகணைக் குண்டுவீச்சுத் தாக்குதல்களும் முகாம்களையும் தற்காலிகமாக ராணுவம் முன்னேறிய பகுதிகளையும் சூழவுள்ள கட்டடங்கள், வீட்டுத்தோட்டங்களை அழித்திடும் ராணுவத்தின் நடவடிக்கைகளும் யாழ்ப்பாணத்தின் இலகுவில் சீர்குலைந்து விடத்தக்க இயற்கைச் சூழலின் சமநிலையை வெகுவாகப் பாதித்துவருகிறது. பலாலி, காங்கேசன்துறை ராணுவமுகாம் பிரதேசங்களைச் சூழமட்டும் ராணுவத்தினரால் 40 , 50 சதுர மைல் பிரதேசங்களில் கட்டடங்கள் தகர்க்கப்பட்டும் வீட்டுத் தோட்டங்கள் நாசமாக்கப் பட்டும் பாலைவனமாக்கப் பட்டுள்ளது. இந்த வகையில் ஆனையிறவு யுத்தத்தின் விளைவுகள் ஆராயப்பட வேண்டியவையாகும். யாழ்ப்பாணத்தின் சிறப்பாக சுண்டிக்குளத்திலிருந்து ஆனையிறவு வரை உவர் நீர்த் தாவரக்காடுகள் செறிந்த பறவைகள் சரணாலயப் பகுதிகளை இந்த யுத்தம் சின்னாபின்னப்படுத்தியுள்ளது.

1980 களில் இடம் பெற்றது போல மரவியாபாரம் அல்லது மரக்கடத்தலுக்கு வரி விதிப்பது போன்ற நடவடிக்கைகளில் விடுதலை இயக்கங்கள் பணம் திரட்டிய நிலைமை மாறி காடுகளைப் பாதுகாத்தலை தமது கடமையாக போராளிகள் மேற்கொள்வது ஓரளவு நிம்மதி தருகின்ற அம்சமாகும். எது எவ்வாறு இருப்பினும் போராட்டம் அரசியல் மயப்படுவதும் இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காண்பது மட்டுமே வடகிழக்கு மாகாணங்களின் இயற்கைச் சூழலை பேரழிவிலிருந்து தடுத்திடவும் மேலும் பாதுகாத்திடவும் உதவும்.

## யாழ்ப்பாணத்தில் 20,000 போத்துக்கேயரா?

போத்துக்கேயர் இலங்கையை அரசாண்ட காலத்தே இங்கு வந்த குவரோஸ் என்னும் போத்துக்கேயப் பாதிரியான சரித்திர ஆசிரியர் எழுதிவைத்த குறிப்பில்,

"யாழ்ப்பாணமும் (Jaffna Patao) போத்துக்கேய மன்னர் சொத்தானது; அங்குள்ள மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களானார்கள்...பெண்களையும் குழந்தைகளையும் விட 20,000 போத்துக்கேய ஆடவர்கள் யாழ்ப்பாணத்தில் அப்பொழுது வாழ்ந்தனர்" என்று கூறியுள்ளார்.

Fernao de Queyroz

www.tamilarangam.net

# மூன்றாம்உலக சனத்தொகை மிதமிஞ்சிப் போய்விட்டதா?



www.tamilarangam.net

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இன்று மேற்கு நாடுகள் மூன்றாம் உலக நாடுகளின் குடித்தொகையினை நோக்கிக் குற்றஞ்சாட்டும் நோக்கில் சுட்டு விரல்களை உயர்த்தி நிற்கின்றன. மேற்கு நாடுகளின் சொந்த நலன்களைத் தவிர இக் குற்றஞ்சாட்டலில் எந்தவித உண்மையும் இல்லை. கடந்த நான்கு தசாப்தங்களாக மேற்குலகின் ஜனத்தொகைக் கட்டுப்பாட்டு ஸ்தாபனங்கள் மூன்றாம் உலகநாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்களையும் அங்குள்ள உயர் குழுவினரையும் இந்த நாடுகளின் வறிய மக்கள் "மிதமிஞ்சிப் போய்விட்டார்களென்றும்", "இவர்கள்தான் இந்த நாடுகளின் குடித்தொகை அமைப்பையே சிதைத்து விடுகிறார்கள்" என்றும் நம்ப வைப்பதில் உண்மையாகவே வெற்றி கண்டுவிட்டன என்றுதான் கூறவேண்டும். இன்று மூன்றாம் உலகநாடுகளில் 95 நாடுகள் இவர்களின் "குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை" நடைமுறைப் படுத்தி வருகின்றன. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நிலமை இந்த மாதிரி இருந்ததில்லை. மேற்கின் ஜனத்தொகைக் கட்டுப்பாட்டு ஸ்தாபனங்கள் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக தமது பிரச்சாரத்தைச் செய்திருக்கின்றன என்பதை இது காட்டுகிறது. எனினும், இந்த" வெற்றிகள்" எவ்வளவு தூரம் நியாயமானது என்று ஆராயும் தேவை எம்முன் உள்ளது.

## சுமதி நாயர்

## தமிழில்: மு.நித்தியானந்தன்

1. மூன்றாம் உலக நாடுகளில் உண்மையிலேயே "மிதமிஞ்சிய ஜனத்தொகை"ப் பிரச்சினை நிலவுகின்றதா?
2. அவ்வாறு இல்லையெனில் அத்தகைய பிரச்சினையை உருவாக்க வேண்டிய தேவை என்ன?

இந்தப் பிரச்சினையின் சிக்கலான பரிமாணங்களை விளங்கிக் கொள்ள நாம் கருத்தூன்றி ஆராய வேண்டிய சில கேள்விகளில் இவை முக்கியமானவையாகும்.

## "மிதமிஞ்சிய குடித்தொகை" பற்றிய சில உண்மைகள்

"அதிக குடித்தொகை" அல்லது "மிதமிஞ்சிய குடித்தொகை" என்ற பதத்தை முதலிற் பார்ப்போம். உண்மையில் இதன் அர்த்தம் என்ன? இது வெறும் ஜனங்களின் எண்ணிக்கை/ நம்பர் பற்றிய பிரச்சினையா? அல்லது ஜனத்தொகைக்கும் அவர்கள் எவ்வளவு மூலவளங்களை அநுபவித்து வருகிறார்கள் என்பதற்கும் (பொருளாதார பாஷையில் மூலவளநுகர்ச்சி - resource consumption ) உள்ள தொடர்பு பற்றிய பிரச்சினையா?.

www.tamilarangam.net

இது உண்மையில் ஜனங்களின் எண்ணிக்கை பற்றிய பிரச்சினை என்றால் இந்த ஜனத்தொகையினை அதன் நிலப்பரப்புடன் தொடர்பு படுத்திப் பார்க்கவேண்டும். ஒரு சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் எவ்வளவு ஜனத்தொகை உள்ளது என்று திட்டவட்டமாக கணிப்பிட்டு, மூன்றாம் உலகின் ஜனத்தொகையுடனும் "மிதமிஞ்சிய" ஜனத்தொகை இல்லாத நாடுகளாகக் கருதப்படும் மேற்கு நாடுகளின் ஜனத்தொகையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பயன் தருவதாகும்.

சுஸான் ஜோர்ஜ் என்ற ஆராய்ச்சிப் பெண்மணி தரும் புள்ளி விபரங்களின்படி பார்த்தால், ஒரு சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் வாழும் ஜனத்தொகை பற்றிய சில நாடுகளின் உண்மை நிலை பற்றிய தரவுகள் ஆச்சரியத்தையும் திகைப்பையும் தரக்கூடும்.

| | | | |
|---|---|---|---|
| பிரித்தானியா | - 229 | பேர் / சதுர கி. மீற்றர். | |
| இந்தியா | - 209 | " | " |
| நெதர்லாந்து | - 385 | " | " |
| பிரேசில் | - 15 | " | " |
| பொலிவியா | - 5 | " | " |
| சீனா | - 102 | " | " |
| பிரான்ஸ் | - 99 | " | " |

"உலகம் முழுவதற்கும் என்றோ, அல்லது எந்தக் குறிப்பிட்ட தேசத்திற்கும் என்றோ ஜனத்தொகை எவ்வளவாக இருக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்கக் கூடிய மந்திர எண்ணிக்கை (magic figure) எதுவும் கிடையாது என்பதை இதிலிருந்து ஒருவர் காணலாம்" என்று அவர் முடிவாய் கூறுகிறார்.

ஆதாரம்: Susan George,"Planetary consciousness" and "Too many poor people" La monde Diplomatique, may 1990, P.18,19)

உணவு வழங்க வேண்டிய ஜனத்தொகையின் எண்ணிக்கை பற்றிய கண்ணோட்டத்திலிருந்து ஆராய்ந்தாலும் கூட, இன்று உலகில் பசிபட்டினியும், போஷாக்கின்மையும் காணப்படுவதற்கு இயற்கை அனர்த்தங்களைவிட, மனிதன் ஏற்படுத்திய காரணிகளே அதிமுக்கிய பங்கு வகிப்பதை நிறுவுவதற்கு நிறையவே ஆதாரங்கள் உள்ளன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உணவை ஒரு ஆயுதமாகப் பாவித்து தமக்கு வேண்டிய லாபங்களைப் பெற்றுக்கொள்வதில் எவ்வளவு குறியாக இருக்கின்றன என்பதும், உள்ளூரின் விவசாய உற்பத்திகளைச் சீரழிப்பதில் அவை எவ்வளவு சாதுரியமாகச் செயற்பட்டு வருகின்றன என்பதும் இன்று ஊரறிந்த ரகசியங்களாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேச நிதி நிறுவனமும் உலக வங்கியும் சேர்ந்து தற்போது நடைமுறைப்படுத்தி வரும் அமைப்பியல் சீராக்கு கொள்கை (Structural adjustment policy) மூலம் ஏற்றுமதியை ஊக்குவிப்பதை வலியுறுத்துவதாகக் கூறி வளர்ச்சி குறைந்த நாடுகளில் உள்ள விவசாயிகளை உணவு உற்பத்தியிலிருந்து அகற்றி பணப்பயிர்களைச் செய்வதன் மூலம் அதிக வருமானம் பெறலாம் என்று அவர்களை நிர்ப்பந்தித்து வருகிறார்கள். விவசாயிகள் உயிர்வாழ்வதையே இது கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.

பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் விவசாயத்தை ஆதாரமாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கொண்டனவாக அமைந்திருப்பதால் உணவுச் செய்கையிலிருந்து பணப்பயிரை நோக்கி விவசாயிகளை நிர்ப்பந்திக்கும் போக்கானது இந்த நாடுகளில் மக்களின் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்யும் நிலமையில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலகம் எவ்வளவு பேரைத்தாங்கக்கூடும் என்றெல்லாம் பூகோள அளவில் எழுப்பப்படும் பிரச்சினைகளை நாம் மிகவும் நுணுக்கமாக ஆராயவேண்டும். மிகவும் கொஞ்சமாகவே உண்டு, உடுத்து, வாழும் ஏழைகளை ஏன் பூகோளம் தாங்கமாட்டாமல் போய்விடும் என்று பார்க்க வேண்டும்.

மேற்கு ஐரோப்பா போன்ற நாடுகளில் வாழும் மக்களது உண்மையான தேவைக்கும் நலனுக்கும் மீறி அவர்கள் மிதமிஞ்சி வளங்களை நுகர்ந்து அநுபவிக்கும் போது, வேறு பல நாடுகளில் பெரும் தொகை மக்கள் வறுமையிலும் போஷாக்கின்மையிலும் வாடுவது ஏன்?.

இது ஜனத்தொகையின் அடர்த்தி பற்றிய பிரச்சனை என்று எடுத்துக் கொண்டாலும் கூட பிரேசிலையும் பொலிவியாவையும் விட இங்கிலாந்தும் நெதர்லாந்தும் கூடிய வறுமையையும் பிற கஷ்டங்களையும் அநுபவித்தாக வேண்டும். ஆனால் நடப்பு வேறு மாதிரியல்லவா இருக்கிறது?.

அப்படியானால் ஒரு நாட்டை "மிதமிஞ்சிய" ஜனத்தொகை கொண்ட நாடாகக் கொள்வதானால் அது அந்நாட்டு மக்களின் சக்தி/மூலவளத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் உள்ளதைக் குறிப்பிடலாமா? அவ்வாறாயின், சில தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளின் தனி நபருக்கான தலா மூலவள நுகர்ச்சி பற்றிய பிரசித்தமான சில புள்ளிவிபரங்களை ஆராய்ந்தாலே போதும்.

"அமெரிக்காவில் வாழும் ஒரு குழந்தை உலகின் மூலவளங்களில் கோரி நிற்கும் பங்கானது பங்களாதேசில் வாழும் குழந்தையை விட 140 மடங்கு அதிகமானதாகும்; நேப்பாளத்தில் வாழும் குழந்தையைவிட 280 மடங்கு அதிகமான

www.tamilarangam.net

சுமையை அமெரிக்காவில் வாழும் குழந்தை பூமியின் மீது நிர்ப்பந்திக்கிறது".
(Paul Ann Erhich, "Too many rich folk" populi, vol 16 no. 3, 1989, P.26)

மாலியில் வாழும் ஒரு ஜிவனின் தேவையைவிட ஓர் ஆண்டிற்கு 155 மடங்கு மேலதிக சக்தி வளத்தை ஒரு பிரான்சியக் குழந்தை நாடி நிற்கிறதென்று சுஸான் ஜோர்ஜ் கூறுகிறார்.

இதனைவிட வடக்கின் (சகல மேற்கு அல்லாத கைத்தொழில் நாடுகள் அனைத்தையும் உள்ளிட்டு) நாளாந்த தேயிலை, கோப்பி, கொக்கோ, பழவகைகள்,புகையிலை, வாசனைப் பொருட்கள் மற்றும் பெரும் தொகை இறைச்சித் தேவையைப் பூர்த்தி செய்யமட்டும் மூன்றாம் உலகின் லட்சக்கணக்கான ஏக்கர் காணிகள் பாவிக்கப்படுகின்றன. ஆனால் இந்த விளை பொருட்களுக்கு வழுங்கப்படும் அநியாய குறைந்த விலையைப் பார்த்தால் திகைப்புத்தான் மேலிடும். நெதர்லாந்து மட்டும் தங்களின் சொந்தத் தேவையை பூர்த்தி செய்வதற்கு மூன்றாம் உலகின் 5மில்லியன் ஹெக்டர் நிலப்பரப்பைப் பாவித்து வருகிறது. (Mercio Gomes et,al, A vision from the south, wise, Amsterdam, 1992, P.72)

மேற்கு நாடுகளின் ஆடம்பரமான வாழ்க்கைப்பாணிகளின் டாம்பீகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மூன்றாம் உலக நாடுகளின் நிலம் பயன்படுத்தபட்டு வரும் நிலையைப் பார்த்தால் நிலப்பயன்பாட்டில் காணப்படும் பாரதூரமான ஏற்றத்தாழ்வுகள் தெரியவரும். மூன்றாம் உலக நாடுகளில் ஏழை மக்கள் தங்கள் ஜீவன வாழ்வையே தக்க வைத்துக் கொள்ள நடத்திக் கொண்டிருக்கும் பெரிய போராட்டத்தின் மத்தியில்தான் இதுவும் நடந்து கொண்டிருக்கிறது. தங்களின் நிலப்பயன்பாட்டில் மேற்குலகின் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கும் இந்தப் போக்கானாது உள்ளுர் மக்கள் தொடர்ந்தும் வாழ வழியில்லாமல், போஷாக்கில்லாமல் செத்துக் கொண்டிருக்கும் நிலையை மட்டுமே உறுதிசெய்கிறது.

## இந்தப்பிரச்சாரம் எதற்காக?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு இந்தக்கருத்தை வித்திட்டவர்களின் வரலாற்று மூலங்களைத் தெரிந்து கொள்வது அவசியம். மூன்றாம் உலக நாடுகளின் ஜனத்தொகையை கட்டுப் படுத்த வேண்டும் என்ற மேற்கத்தைய தேவை 1940களின் பிற்பகுதியிலும், 50' களின் முற்பகுதியிலும்தான் எழுந்தது. இதற்கு முன்னர், மேற்கு நாடுகளின் காலனிகளாகவிருந்த இந்த மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் கூட்டம் காலனித்துவ எசமானர்கள் நினைத்த போதெல்லாம் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு எளிதாக மாற்றிக் கொள்ளக் கூடிய மலிவான உழைப்பாளர் பட்டாளமாகவே கருதப்பட்டது. இத்தகைய ஊழியப்பெயர்ச்சி மேற்கு நாடுகளின் பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ச்சியில் மிகவும் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ளது. ஆபிரிக்க அடிமைகள், ஆசிய ஒப்பந்தக் கூலிகள் மற்றும் சுயேச்சையாக நாடு விட்டு நாடு சென்ற ஊழியம் என்பன இதற்கு உதாரணங்களாகும். இந்தக் காலங்களில் எல்லாம் 'மிதமிஞ்சிய' குடித்தொகை கொண்ட காலனிகள் என்று யாருமே பேசியது கிடையாது.

1950களையடுத்து ஒன்றின் பின் ஒன்றாக காலனிகள் சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து தமது சொந்த பொருளாதார வளர்ச்சிக்கான பாதைகளை அவை வகுக்கத் தொடங்கின. சீனப் புரட்சியின் பேரலைகள் எழுச்சியோடு வீசிக்கொண்டிருந்த காலகட்டம் இது. அமெரிக்காவையும், இங்கிலாந்தையும் சேர்ந்த தொழில் அதிபர்கள் இந்த கம்யூனிஸ சித்தாந்தம் ஆசியாவின் பிற பகுதிகளுக்கும் குறிப்பாக இந்தியாவிற்கும் பரவிச் செல்லும் ஆபத்தைப் பற்றி பீதி கொண்டனர். இந்த நாடுகளுக்குள் மேற்கின் சாத்தியங்களை இவை பெருமளவில் பாதித்தன. மேற்கு நாடுகளுக்கும், கம்யூனிஸ முகாமைச் சேர்ந்த நாடுகளுக்கும் இடையில் எழுந்த முரண்பாடுகள் பெருமளவு இந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகளை தமது செல்வாக்கிற்குட்படுத்தும் போட்டா போட்டியில் எழுந்த முரண்பாடுகளேயாகும். இந்த நாடுகளின் உள்ளூர் நடவடிக்கைகளில் தலையிடும் ஒரு வழியாகவே மேற்கு நாடுகளின் ஜனத்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் அமைந்தன. இவ்வாறு ஆரம்பமான 'குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்' இந்தியாவில் 1952லேயே செயற்பட ஆரம்பித்துவிட்டது.

உலகில் அபிவிருத்திப் போக்குகளில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் துரித மாற்றங்களையடுத்து, மூன்றாம் உலக நாடுகளின் ஜனத்தொகையை ஏன் கட்டுப்படுத்தியாக வேண்டும் என்பதற்கான காரணங்களிலும் வேறுபாடுகளும் மாற்றங்களும் தென்படலாயின. எனினும் சாராம்சத்தில் இவை பழையன மாதிரியாகவே இருந்தன. அண்மைக் காலத்தில் ஜனத்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை வெகு தீவிரமாக ஊக்குவிப்பதில் வடக்கு நாடுகள் காட்டிவரும் பெரும் அக்கறைக்கு மூன்று பாரிய காரணங்களைக் கூற முடியும்.

## மேலாதிக்கம் அழிந்து விடுமா?

1. கடந்த அரைநூற்றாண்டில் மேற்கு நாடுகள் பூஜ்ய அல்லது பூஜ்யத்திற்கு கிட்டிய ஜனத்தொகை வளர்ச்சியையே கொண்டிருந்தது. இத்தகைய ஒரு வளர்ச்சிப் போக்கின் விளைவுகளை- குறிப்பாக ஜனத்தொகையில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், அது பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பும் இப்போதுதான் உணரப்பட்டது. கைத்தொழில் நாடுகளின் ஜனத்தொகை 2025ம் ஆண்டளவில் உலக ஜனத்தொகையின் 16% மாக அமையும் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்த நாடுகள் 1950ம் ஆண்டில் உலக ஜனத்தொகையின் 33%மாக இருந்தன. மறுபுறத்தில் மூன்றாம் உலகின் ஜனத்தொகை உலக ஜனத்தொகையின்

www.tamilarangam.net

84% அதிகரித்துச் செல்லவிருக்கிறது. இத்தகைய மாற்றத்தின் நீண்டகால விளைவு யாதெனில் மேற்குலக மக்கள் உலகின் மீது கொண்டிருந்த மேலாதிக்கம் அழிந்து கொண்டிருக்கிறது என்பதாகும். ஐரோப்பாவின் உயர் குழுவின் மத்தியில் இந்த அச்சம் அவர்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது. மூன்றாம் உலக நாடுகளில் 'மிதமிஞ்சிய' ஜனத்தொகை காணப்படுவது பற்றிய இவர்களது பிரச்சாரம் அண்மைக்காலத்தில் தீவிரமுற்றுக் காணப்படுவதற்கு இது ஒரு முதன்மையான காரணமாகும்.

## பழியை இவர்கள் தலையில் போடுங்கள்!

2. மூன்றாம் உலக ஜனத்தொகையை முக்கிய இலக்காக்க வேண்டியதற்கான இரண்டாவது முக்கிய காரணம் இந்த மக்களை 'பிரச்சினைமயப்படுத்துவதில்' உள்ள தத்துவார்த்த அம்சமாகும். இந்த மக்கள் 'மிதமிஞ்சி' ப்பெருகிவிட்டார்கள் என்றெல்லாம் எழுப்பப்படும் குரல்கள் இன்று சூழல் நாசமடைந்து வருவதில் மேற்கு நாடுகள் வகித்து வரும் முக்கிய பங்கு என்ன என்பதை சராசரி மேற்குலகவாசிக்கு விளக்காமல் மூன்றாம் உலகில் பெருகிவரும் ஜனத்தொகைதான் சூழல் அழிவதற்கு காரணமென்று அவனது கவனத்தை திசை திருப்பிவிடத் துணைபுரிகின்றன. இந்தப் பூகோளத்தைப் பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய பாரதூரமான நடவடிக்கைகளைப் பற்றி தமது மக்களுக்கு எடுத்துக்கூற மேற்குலகின் அரசியல்வாதிகள் அஞ்சுகிறார்கள். பொருளாதாரத்தை அடிப்படையில் மாற்றியமைப்பது தொடர்பாகவோ அல்லது வாழ்க்கைப் பாணிகளின் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தக்கூடிய எந்தத் திட்டங்களும் மக்கள் மத்தியில் தமக்குள்ள செல்வாக்கை அழித்து விடும் என்றும் மீண்டும் தம்மைப் பதவிக்கு வர அவர்கள் வாக்களிக்கப் போவதில்லை என்றும் அஞ்சும் அரசியல் வாதிகள் இத்தகைய திட்டங்களை எப்படிச் செயற்படுத்துவார்கள்?

இதற்கு நல்ல உதாரணம்: ரியோ டி ஜனரோவில் நடைபெற்ற உலகச் சுற்றாடல் பற்றிய மகாநாட்டின் போது அமெரிக்காவின் மூலவள நுகர்ச்சி அமைப்பில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று கேட்கப்பட்டபோது அமெரிக்காவின் வாழ்க்கை முறை பற்றி யாரும் வாதத்தில் ஈடுபடமுடியாது என்று ஜோர்ஜ் புஷ் அளித்த பதிலாகும். உண்மையில் உலக ஜனத்தொகையில் 6% பங்கையே கொண்டிருக்கும் அமெரிக்கா உலகமூலவளத்தின் 20% பங்கினை நுகர்கிறது. அதே சமயத்தில் மறுபுறம் மூன்றாம் உலக நாடுகளின் ஜனத்தொகை கட்டுப்படுத்தப் படவேண்டும் என்ற கருத்தினை பிரபல்யப் படுத்தும் தலையாய நாடாகவும் ஜனத்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களின் முக்கிய ஆதரவாளராகவும் அதுவே திகழ்கிறது. மூல வளங்களைப் பொறுத்தவரையில் அவை கிடைப்பது பெரிதும் அரிதாகிப் போய்க்கொண்டிருக்கும் வேகத்தில் நாடுகளுக்கிடையே; விசேஷமாக செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையேயான தகராறுகள் தீவிரம் கொள்ளத் தொடங்கும். மூன்றாம் உலக நாடுகளை 'அதனுடைய இடத்தில் வைப்பதற்கு' பாவிக்கப்பட்டு வருகின்ற பல்வேறு 'ஆயுதங்களில்' குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டமும் முக்கியமான ஒன்றாகும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தாராள சந்தைக்கு வசதி!

3.மூன்றாவதாக, மூன்றாம் உலகின் ஜனத்தொகையைக் கட்டுப்படுத்துவதை ஊக்கிவிக்கும் திட்டங்கள் 'தாராளசந்தை' ப் பொருளாதார உத்திமுறைகளுடன் மிக நெருக்கமான உறவு கொண்டுள்ளன. செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் உள்ள பிரிவு வேகமாக அதிகரித்துக் கொண்டு செல்லும் இன்றைய நிலையில் வறுமையை இல்லாமல் ஒழிப்பது என்பதை விட, வறிய மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றி அதிகம் பேசப்படுகிறது. தாய்மார்கள் குறைந்த எண்ணிக்கையில் பிள்ளைகளை வைத்திருப்பது மலிந்த விலையில் உழைக்கக்கூடியவர்களை சந்தைக்கு விடுகிறது. மேற்கிலிருந்து மூன்றாம் உலகை நோக்கி பல்தேசியக் கம்பனிகளின் தொழில்கள் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் இன்றைய கட்டத்தில் மலிவான விலையில் கிடைக்கக் கூடிய இந்த 'ரிசர்வ்' தொழிலாளர்கள் மிகமிகத் தேவையானவர்கள்.

"தாராள சந்தை" யின் மற்றுமொரு அம்சம் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கூடாக மேலை நாடுகளின் மருந்து தயாரிப்புக் கம்பனிகளின் கருத்தடைத் தயாரிப்புகளுக்கு மூன்றாம் உலக நாடுகளில் பாரிய சந்தைகளைத் திறப்பதாகும். கருத்தடைச் சாதனங்கள் பெண்களின் வாழ்க்கையில் மிக நீண்ட காலத்திற்கு தேவைப்படுவதால் இந்தத் தேவையைக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் தமக்குச் சாதகமாக பாவிக்கின்றன. சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் (USAID) என்ற ஸ்தாபனம் உலகரீதியாக குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்துவதிலும் அதற்கு நிதியுதவி வழங்குவதிலும் உலகில் முன்னணி வகிக்கும் அமைப்பாகும்.

அமெரிக்க அரசாங்கத்திற்கு 1985ல் USAID என்ற இந்த நிறுவனம் சமர்ப்பித்த மனுவில், "ஜனத்தொகைத் திட்டங்களில் உள்ளடங்கக்கூடிய எந்த அம்சத்தை விடவும் குடும்பக்கட்டுப்பாட்டுச் சேவைகள்தான் அமெரிக்காவின் தனியார் துறைக்கு சாதகமான வாய்ப்புக்களை உருவாக்கித் தரக்கூடியதாகவுள்ளது. இந்தத் திட்டங்களுக்கூடாக USAID யானது தரக்கூடிய அமெரிக்கத் தயாரிப்பில் உருவான குடும்பக்கட்டுப்பாட்டுச் சரக்குகளை கொள்வனவு செய்தும் இத்தொழில் நுண்முறைகளையும் மூலவளங்களையும் பரிமாற்றம் செய்வதில் தனியார் ஸ்தாபனங்களைப் பயன்படுத்தியும் உதவுகிறது" என்று குறிப்பிட்டிருப்பதை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமாகும்

தனியார் ஸ்தாபனங்களுக்கு உதவுவது என்பதை விடவும் குடித்தொகை நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதியம் (UNFPA), சர்வதேசியத் திட்டமிடப்பட்ட பெற்றோர் தன்மைகள் கூட்டிணைப்பு(IPPF) மற்றும் அமெரிக்கா

www.tamilarangam.net

சார்ந்த ஜனத்தொகைக் கவுன்சில் அனைத்தும் மருந்துக் கம்பனிகளுக்கு பல்வேறு வழிகளிலும் உதவி வருகின்றன. ஒன்றை ஒன்று ஆதாரப்பட்டு நிற்கின்ற நிர்வாக அமைப்புக்களும் ஜனத்தொகை கவுன்ஸில் போன்ற கருத்தடை ஆராய்ச்சி ஸ்தாபனங்கள், தனியார், அரசுத்துறை சார்ந்த ஜனத்தொகைக் கட்டுப்பாட்டு ஸ்தாபனங்கள் மற்றும் மருந்துத் தயாரிப்பு தொழில் ஸ்தாபனங்கள் போன்றவற்றிற்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் இடையில் நிதி ரீதியிலான உதவும் அமைப்பு முறைகளும் உள்ளன. இது பற்றிய தகவல்களில் பொதுமக்களுக்குச் சொல்லப்பட்டது மிகவும் அற்ப சொற்பமானதுதான். உதாரணமாக International Planned Parenthood Federation (IPPF) ன் அதிகார சபைக்கூட்டத்தில் dupont chemicals , அமெரிக்க சீனிக்கூட்டுத்தாபனம், ஜெனரல் மோட்டோர்ஸ், சேஸ் மென்ஹட்டன் பாங்க், நியூமொன்ற் மைனிங், இன்டர்நேஷனல் நிக்கல், மெக்ரோனி, RCA ZEROX, GULF OIL போன்ற ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளே பங்கு கொள்கிறார்கள். ஆதாரம்:V.Ramprasad, INEQUITIES,Not population growth The real reasons for hunger, "THIRD WORLD RESURGENLE, Malaysia. no.16, Dec 1991, P.19-20) இந்த IPPF என்ற ஸ்தாபனம் மூன்றாம் உலகின் ஜனத்தொகைக் கட்டுப்பாட்டைச் செயற்படுத்தும் உலகின் முதன்மை வாய்ந்த அமைப்புக்களில் ஒன்றாகும். IPPF ஸ்தாபனத்தின் இயக்குனர் Fried Sai இப்போது உலக வங்கியின் ஜனத்தொகைப் பிரச்சினைகள் பற்றிய துறையின் பிரதான ஆலோசகராக இருந்து வருகிறார்.

இந்த ஸ்தாபனங்களின் மற்றுமொரு முக்கிய அம்சம் UNFPA போன்ற ஸ்தாபனங்கள் NORPLANT என்ற கருத்தடை மாத்திரைகளை பின்லாந்தைச் சேர்ந்த மருந்துக் கம்பனியிலிருந்து பெரும் தொகையாக் கொள்வனவு செய்து மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்களுக்கு அவற்றை வழங்கி அங்கு அவற்றை பாவிக்க நிர்ப்பந்திக்கின்றன.

இந்தோனேசியாவை எடுத்துக் கொண்டால் பலவருஷ காலமாக கருத்தடை சாதனங்களைப் பெருந்தொகையாக இலவசமாக விநியோகித்து வந்த UNFPA தனது இலவச சேவைகளை நிறுத்திக் கொண்டு கருத்தடை மாத்திரைகளைத் தயாரிப்பாளர்களிடம் இருந்து நேரடியாகவே வாங்கிக் கொள்ளுமாறு அறிவித்து விட்டது. இதற்கு பெரும் தொகைக் காசு தேவையாதலால், இச்சந்தர்ப்பத்தில் உலக வங்கியே இந்நோக்கத்திற்காக இந்தோனேசிய அரசாங்கத்திற்கு "கடன்"வழங்க முன்வந்தது.

இந்த ஊடல்மாடலான தொடர்புகள் எல்லாம் மூன்றாம் உலகின் ஜனத்தொகை 'மிதமிஞ்சிப் போய்விட்ட'தென்ற பீதியைக்கிளப்பும் திட்டமிட்ட பிரச்சார தந்திரத்தின் ஒரு அம்சம்தான். இந்த 'ஜனத்தொகைப்பிரச்சினை'யை வாழவைப்பதில் மேற்குலகின் சர்வதேச அமைப்புகளின் அக்கறைகளில் பெரிய முரண்பாடு எதுவுமில்லை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மூன்றாம் உலகில் என்ன செய்கிறார்கள்?

ஜனத்தொகைப் 'பிரச்சினைக்கான' தீர்வாக இன்று மூன்றாம் உலக நாடுகளில் பெருமளவில் தீவிரமாக குடும்பக்கட்டுப் பாட்டுத்திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டு வருகின்றன. இது பெருமளவில் வெற்றி தரவில்லையாயினும் கடந்த நான்கு தசாப்தங்களில் இதுவே முக்கியமான அணுகுமுறையாக இருந்து வந்துள்ளது. இவற்றின் தோல்விகளை விளங்கிக்கொள்வதற்கு எந்த வகையில் இந்தத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன என்று நுணுக்கமாக ஆராயவேண்டும். இந்தியாவில் "குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம்" என்னமாதிரி மேற்கொள்ளப்பட்டது என்று பார்த்தால் இந்த உண்மைகள் பளிச்சிடும்.

குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை முதலில் அமுல்படுத்தத் தொடங்கிய நாடுகளில் இந்தியா முதன்மையானதாகும். இந்தக் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சில அம்சங்கள் பொதுவானவையும் அடிப்படையானவையுமாகும்.

*இத்திட்டம் இலக்கு சார்ந்தது.

ஒவ்வோர் ஆண்டும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தில் அடையப்பட வேண்டிய இலக்கு எவ்வளவு என்பதை மத்திய அரசு தீர்மானிக்கும். அதாவது, கருத்தடை செய்யப்படவேண்டிய பெண்கள் எத்தனைபேர், IUD மற்றும் கருத்தடை மாத்திரைகள் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட வேண்டும் போன்ற எண்ணிக்கை விபரங்கள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டு விடும். 'கருத்தடைச் சாதனங்களைப் பாவிப்போர் ' என்ற இந்த 'இலக்கை' நோக்கி இனித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பிக்கப்படும்.

* இக்குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் ஆதார மருத்துவ மையங்களுக்கூடாகவே நடைமுறைப் படுத்தப்படுகின்றன. தங்களின் முழு நேரத்தையும் பணத்தையும் செலவிட்டு கருத்தடைச் சாதனங்களைத் தலையில் கட்டிவிடுவதே இவர்களின் முழு நோக்கமாகும். சுகாதார நலன் எதுவுமே பேணப்படாத இடத்திலும் அவற்றின் இடத்தில் கருத்தடைச் சாதனங்களை அமுல்படுத்துவது மட்டுமே நடைபெறுகிறது. யாருக்கு என்றில்லாமல் கண்மூடித்தனமாக கருத்தடையைச் செய்துவரும் வேகத்தைப்பார்த்து இன்று சாதாரண மக்கள் இக்குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சந்தேகத்துடன் பார்க்க ஆரம்பித்துவிட்டனர்.

* யார் கருத்தடையை ஏற்றுக்கொள்வது, எந்த வழிமுறைகளில் அது மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றிய சகல முடிவுகளையும் அரசாங்கமே தீர்மானித்து விடுகிறது. வசதியில்லாத குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள்

www.tamilarangam.net

(ஆண்களும்கூட) தங்களுக்கு பொருத்தமான ஒரு முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது கூட சாத்தியமில்லை. இத்திட்டங்கள் யாவும் வறிய மக்களையும், நாடோடி இனமக்களையுமே மையமாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றன.

* தாய்மார் மற்றும் சிசு மரணவீதம் இன்றும் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகிறது. இவர்களின் பொதுவான வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அற்ப சொற்பமான முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டங்கள் இந்த விதமாக அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், இந்தியா போன்ற விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்ட நாட்டில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை நிலையை எடுத்துக் கொண்டு பார்த்தால் 3 அல்லது 4 குழந்தைகளைப் பெறுவதும் அவர்களில் தங்கியிருப்பதுமே மிகவும் நடைமுறைபூர்வமான மக்களின் தெரிவாக இருக்கமுடியும். ஊழியச்செறிவான விவசாயப் பொருளாதாரங்களில் குடும்பங்களின் ஜீவிதத்திற்கு குழந்தைகள் மிகவும் வேண்டப்படுகிறார்கள். குழந்தைகள் மலிவான உழைப்பை நல்குகிறார்கள் என்பது மட்டுமல்ல, சமூக பாதுகாப்புச் சேவைகள் எதுவுமே இல்லாத இடத்தில் வயது போன காலத்தில் இவர்கள் பாதுகாப்பு வழங்கக் கூடியவர்களாயும் அமைகிறார்கள். சிசு மரணவீதம் எவ்வளவு அதிகமாகக் காணப்படுகிறதோ- அதாவது தாய்மார்கள் தாங்கள் பிரசவிக்கும் குழந்தைகளை இழந்து கொண்டு போகும் நிலையில் தாங்கள் மேலும் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவே முயல்வார்கள். கடைசி மூன்று குழந்தைகளையாவது தக்க வைத்துக் கொள்ளவாவது அவர்கள் முயற்சிப்பது இயல்பே. அடுத்த முக்கியமான அம்சம் வறிய குடும்பங்களில் சிறு குழந்தைகளே மகிழ்ச்சியைக் கொண்டுவரும் முக்கியமான காரணியாயும் அமைகிறார்கள். குழந்தைகள்தான் இங்கு மகிழ்ச்சியின் ஊற்றாகவும் நம்பிக்கை ஒளியாகவும் திகழ்கிறார்கள் என்ற உண்மையைப் பலர் மறந்து விடுகிறார்கள்.

## முடிவுரை

மூன்றாம் உலகில் 'மிதமிஞ்சிய குடித்தொகை' என்று பரப்பப்பட்டு வரும் பிரச்சாரத்தை நாம் மேலே விபரித்த காரணிகளின் பின்னணியிலேயே ஆராய வேண்டும். உலகில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் கருத்தடைச் சாதனங்கள் தேவையேயில்லை என்பது இதன் அர்த்தமல்ல. எதுவாயினும், மூன்றாம் உலகில் ஜனத்தொகைக் கட்டுப்பாட்டை வலியுறுத்தும் சகல ஸ்தாபனங்களும், செல்வந்தர்களின் நலன்களை மட்டுமே குறியாகக் கொண்ட, அதுவும் பெரும் பான்மை வெள்ளை இனத்தவரின் நலன்களையே கருத்தில் கொண்ட ஏகாதிபத்தியத் தன்மை கொண்டன என்பதையே இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

இந்தத் திட்டங்கள் அடிப்படையில் பால்சார்பு(SEXIST BIAS) கொண்டது என்பதுவும் மிகவும் தெளிவானது. இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்போர் மற்றும் மருத்துவர்கள் அனைவரும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்களேயாவார்கள். ஆனால் இந்தக் கருத்தடைச் சாதனங்கள் யாருக்கு விநியோகிக்கப் படுகிறதோ அவர்கள் அனைவரும் பெண்களே என்பதையும் நாம் நோக்க வேண்டும்.

உண்மையில் இன்று உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடையம் யாதெனில், மேற்கு நாடுகள் புதிய வளங்களுக்காகவும், விவசாய விளைபொருட்களுக்காவும் எவ்வளவு தூரம் மூன்றாம் உலக நாடுகளைச் சார்ந்து நிற்கின்றன என்பது பற்றி மேலும் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதாகும். உண்மையில் சமமற்ற - பாரபட்சமான போக்குக்கள் எவ்வாறு இடம் பெற்றிருக்கிறது என்பதையும் மேற்குலக மக்களின் மிகையான நுகர்ச்சியைப் பற்றியும் சராசரி மேற்குலக வாசியின் வாழ்க்கைப் பாணியைத்தொடர்ந்து கொண்டு நடத்துவது சாத்தியமேயல்ல என்பதும் பற்றிய கலந்துரையாடல்கள் அப்போதுதான் உருவாகும். மேலும் மூன்றாம் உலக நாடுகளின் நிலப்பயன்பாடு எவ்வாறு உள்ளது என்பது பற்றியும் விவசாய சார்புடைய இந்தக் காணிகளில் காலனித்துவம், பசுமைப்புரட்சி, ஏற்றுமதி சார்ந்த நாட்டங்கள் என்பன எத்தகைய சிதைவுகளை மேற்கொண்டுள்ளன என்பதும் ஆராயப்பட வேண்டியதாகும்.

"உலகம் எவ்வளவு மக்களைத் தாங்க முடியுமோ அந்த எல்லையை அடைந்துவிட்டது" என்ற கூற்றினை உண்மை என்று நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கு முன், நின்று நிதானித்து நாம் இன்னொரு கேள்வியை எழுப்பலாம்:

இந்த உலகம் யாரைத்தாங்க முடியாமல் தவிக்கிறது?
வறுமையிலும் போஷாக்கில்லாமலும் வாடும் வறியமக்களையா?
அல்லது
மிகையாக உலகின் வளங்களை நுகர்ந்துகொண்டிருக்கும் செல்வர்களையா?

---

**வாசகர்களே**

**இவ்வருடத்திற்கான புதிய சந்தாக்களை அஆஇ உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. முடிந்துபோன தங்களின் சந்தாக்களைப் புதிப்பிக்குமாறும், புதிய சந்தாதாரர்களை அறிமுகம் செய்யுமாறும் நன்றியுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ■■■■ சந்தா ■■■■

சந்தா :1வருடம்(தபாற் செலவு உட்பட)

| | |
|---|---|
| நெதர்லாந்து | - f 15,- |
| ஐரோப்பா | - f 20,- |
| ஆசியா | - 12$ |
| அமெரிக்கா | - 12$ |
| அவுஸ்திரேலியா | - 12$ |

வங்கி கணக்கு: 12 75 43 171

Rabobank,Odijk,Nederland.

மனித உரிமைகளுக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் குரல் எழுப்பும் பத்திரிகை. நீங்களும் சந்தாதாரராகுங்கள்.

# சரிநிகர்

ஒரு வருட சந்தா 15$

6, அலோசாலை கொழும்பு-3 இலங்கை.

SARI NIHAR 6 ALOE AVENUE COLOMBO-3 SRI LANKA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்